872

அர்ச்சுனன் திருக்கல்யாணமென்னும்

# சுபத்திரை மாலையீடு நாடகம்.

இஃது,

சாலை கிருஷ்ணசாமி நாய்க்கரால்

எழுதப்பட்டு

உளுந்தூர்பேட்டை புள்ளி வியாபாரம்.

ம-ள-ள-ஸ்ரீ, குருசாமிசெட்டியாரால்

கொடுக்கப்பட்ட இன்னுடைகர்தை.

சூவா முனிசாமி முதலியாரால்

சகலசுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு

ரிஜிஸ்டர் செய்து.

...ள,

தனலக்ஷ்மி நர்... ...யந்திரசாலையிற்

பதிப்... ...டது.

இதன் விலை] [அணா-5

ரிஜி... ...ரையிட்.

நெ. 71-விஜயவி... ...காவின் தெருவு சூளை.

உ

கண்ணன் துணை.

# அர்ச்சுனன் திருக்கல்யாணமென்னும்.

# சுபத்திரை மாலையீடு நாடகம்.

48028
1944
480028

விநாயகர் துதி-சீசபத்தியம்

ஸ்ரீனந்தகோவிந்த தேவநாராயணன்
சுபத்திரைகலியாணம்பாடவேதான்
யாதவனொளிபோன்ற அர்ச்சுனன்மீதிலே
ஆசையாய்மையல்கொண்ட அருவையாள்தான்
காதலிசுபத்திரை கலியாணம்நான்பாட
வாதொருபிழைகள்வந்திடாமல்தான்
மாதவந்தன்னிலேவளர்நகர்வாழ்கின்ற
வாரணன்முகத்தனார்காப்பதாமே.

சுப்பிரமண்யர் துதி-சீசபத்தியம்.

தனுவனைத்தெதிர்கின்ற சத்ராதிதன்னையே
அனுவாகப்பாவித்த அர்ச்சுனன்தான்
மனுக்கள்மாந்தாரியர் வளைத்தெதிர்செய்திடும்
மன்னவன்தோளினில் மாலையிட்ட
அன்னநடைசுபத்ரை அருவையாள்கவிதைமுன்
ஆறுமுகவேலவர் அரும்பதம்காப்பே.

சரஸ்வதிதுதி-அகவல்.

சன்னுசியவர்போலே தார்வேந்தனர்ச்சுனன்
சதிராகவந்தவன் நாளினில்வீழ்ந்து
சொன்னசொற்றவறாமல் தொழுதுநின்றவனை
சுபத்திரைகலியாணம் சுரமாய்பாடவே
உதித்ததோர்வாக்கை உலகினிலரிய
நன்னிலத்தன்னிலே நாவினுரைத்தேன்
நாரணிசரஸ்வதி நாயகிபோற்றி
மன்னுமாதவராள பிர்ம்மநாநாவிலே

வரந்தந்துவாணிநீ அருள்தரவேணும்
செழித்திடும்வாரகமா நதிக்குந்தென்பாரிசத்தில்
வாழ்ந்திருக்குமருளன்ன வன்னியகுலதேவனார்
துரைவாசுதேவன் தேவகியளித்திடும்
சுபத்திரைகலியாணம் செப்பவேநானே
வடிதமிழ்க்கவிபாடும் வல்லவனார்களே
மாதவன் றகுநாதன் வள்ளலான
தடமதாகியகிஷ்ட்டப்ப நாய்க்கனார்பாடவே
நன்மையாய்க்கைகொண்டு கவிலுவீர்நீங்கள்
துடர்கவிகுற்றங்கள் சொல்லாமல்கவிவாணர்
சொற்கற்றிடும்அடியர் துணையருள்தந்து
தூண்டியெனைரக்ஷிக்க தோகையேகாப்பாய்

கதையின்வரலார்-அகவல்.

சொல்லியபெருமை துவாரகாபுரியில்
யெல்லையிலவர்கள் யெதிர்குலத்துதித்தோர்
வல்லமையுடைய வரும்பெலதீரன்
நல்லமாதவனார் நலமுடனிருக்க
சந்ரகுலத்துரியன் தர்மருக்கிளையோன்
சுந்திரமுகத்தோன் செல்வஅர்ச்சுனன்தான்
யிந்திராபுரியி லிருந்தரசாள
வந்ததோர்விதியால் மன்னவன்தானும்
தீர்த்தயாத்திரைகள் சென்றுதான்பரமன்
கோத்திரமுதலாய் கூடியேநடந்து
தேசங்கள்தோரும் தீர்த்தங்களாட
வாசமாய்திரிந்து மன்னனர்ச்சுனன்தான்
வடமதுரைதன்னில் வந்துமேயிருக்க
அடவதாய்பலராமர் அரிந்தவரெழுந்து
யெங்களாண்டவரே யெழுந்தருளென்று
தங்கள்தானத்தில் சதிருடனிருதித்
பணிவிடைக்காக பங்கிளியாளை
அணிகுழல்சுபத்ரை அம்மனையழைத்து
யிருந்திடும்போது யின்பமுமிகுத்து
வருந்தியேகிஷ்ணரும் மாயவஞ்சகத்தால்
அர்ச்சுனன்தானும் அருவையாள்தன்னை



விவாகமேசெய்து தன்னகர்தனக்கோ
பலாராமர்கண்டு பரதவித்தெழுந்து
கோபமேகொண்டு கொடுங்கண்சிவந்து
தாபமாய்மனது தானதுதெளிந்து
மன்னனர்ச்சுனனை மாவென்றழைத்து
அன்னகர்ஜெனங்கள் ஆனைவருமாக
மணமதுசெய்து மாலையிட்டவரும்
அணிகுழலாளும் அர்ச்சுனன்தானும்
யிந்திராபுரிக்கு யேகியேநடக்க
சுந்திரதர்மர் சீர்பாதம்பணிந்து
யிந்ததோர்கதையை யிசையவேபுலவோர்
அறிந்துளங்களித்து ஆதரிப்பீரே.



கட்டியன்வருகிற-கவி.

துஷ்ட்டரைவென்றகிஷ்ணன்சுகம்பெறநடத்தும்நல்லோர்
மட்டலர்க்கமலமாதுவார்த்தையிலிருந்துவாழ்வோர்
ஒட்டியேவெற்றிகொண்டும்உயிர்பலராமர்வாசல்
கட்டியக்காரன்வந்துகளரியில்தோன்றினானே.

கட்டியன்வருகிற-தரு.

| | |
|---|---|
| நகைத்தமுகம்துலங்கவே | கட்டியக்காரன் |
| நாரணனார் | சபையில் |
| சிரசிறகோனை | பாரைகலைத்துமே |
| கட்டியக்காரன் | சொகுசுடன்மேவினானே |

காலிற்சிலம்பொலிக்கவே வெருவித
வேலும்கட்டாரி யேந்தவே
ஓலைப்பணியதுபோல் சபைதன்னில்
ஓடியே வந்தனனே
பல்லும்பலகரைப்போல் சொகுசுடனே
பார்த்தவிழி துலங்கவே
வல்லமையாகவேயான கட்டியக்காரன்
வாரானிதோ சபையில்
கந்தனென்றுசொல்லி கட்டியக்காரன்
காரணனார் சபையில்
சிந்தைமகிழ்வாக சபைதன்னில்
சொகுசுடன் யேகிரானே-ககைத்த

பொது-வசனம்.

அகோ கெப்படியென்றால் வடமதுராபுரி பட்டணத்தை அரசுசெய்து வாரானின்ற உக்ரசேன மகாராஜன் சபைக்குகொலுவாகவருகிறதிங்காண்க.



[illegible]னன் வருகிற கவி.

உகமையாவுதந்த உகசிரசேனன்தானும்
உற்றமர்கள்முதலான ராஜர்போற்ற



மகிபதியும்போற்ற மறையோர்கள்வாழ்த்த
வளர்கோஷ்டமென்னதிக மன்னர்சூழ
தெய்வரம்பயர்கள்வந்து பாடியாட
ஜெகமெலாம்புகழும்ஜெய உக்ரசேனன்
சிரசினிலேமணிமுடியும் பளபளென்ன
சீருடனேசபையில்வந்து தோன்றினாரே



பலாரமர் உக்ரசேனன் சாத்ரகிவருகிற-தரு.

இயலுள்ளகுணசீலன் யெதிர்குலமகிபாலன்
சுவரதிமண்டலாதிபராஜன் துவாரகாபுரியில்வாசன்
அந்தணர்கோஷ்டம்பாட அருவயர்நடஞ்செய்ய
வந்தவர்மகிழ்ந்திட மண்டலாதிபர்புகழ்ந்திட
அகமையுள்ளகன்னியர்கள் அரிவயராலாத்தியேந்த
தகமைபெரும்உக்ரசேனன் சதிருடனேகொலுவானார்
அதிகபலபத்திரரும் அரசரும்புடைசூழ
மதியுடையமந்திரிமாரும் வரிசையுடன்வந்துமேவினார்
நாகசுரமேளமோத நாதகின்னரிகள்பாட
தாரணிபுகழ்உக்ரசேனன் சபையில்வந்துகொலுவாகிறார்- இ

கிஷ்ணமூர்த்திவருகிற-கவி

குணைகட லுலகிற்சேனைகொலுவினிலிருக்கும்போது
புனைகடலமுர்தம்போற்ற உம்பர்கள்முனிவர்கோமான்
தனைகடற்பணிவோன்மாயோன் துளசிகாபரணமூர்த்தி
நினைகடற்புகழும்கிருஷ்ண தேவரும்வருகின்றாரே.



கிருஷ்ணமூர்த்தி வருகிற தரு

வந்தாரிதோ கரிவருதராயர்
சிந்தாய்க்குலந்தவிழ்த்த செயகண்ணராயர்
திலர்தமுடி தானதுலங்க-நல்ல
நெத்தியில்கஸ்த்தூரி நாமமிலங்க
கந்தரத்துளப மாலைகுலுங்க
கவுஸ்த்துவாபரண மணியாரந்துலங்க
கையில்திகிரிசங்கும் கெதையெடுத்து
மெய்யில்பிதாம்பரம் தன்னையுடுத்தி
வையகத்தோர்களிக்க வந்துமேவினரே-வந்தா

கிருஷ்ணமூர்த்தி ஒயில் தரு.

ருக்மணிசத்யபாமா மித்ருசாம்பவதியுடன்
தக்கசேர்காளந்தியுடனே ஸ்ரீகிருஷ்ணதேவர்



சம்பிரமுடன் வந்துமேவினார்
தேவகிகுமாரனான ஸ்ரீரங்கநாதரிப்போ
வேதியர்கள்கோஷ்ட்டம்பாடவே ஸ்ரீகிருஷ்ணதேவர்
வீரமுடனே வந்துதோன்றினார்
ஆதிநாராயணமூர்த்தி அரிகரிவாசுதேவனா
சோதிமுடிதான் துலங்கவே ஸ்ரீகிருஷ்ணதேவர்
சொகுசுடனே வந்துமேவினார்
மெய்யினிற்பிதாம்பரங்கள் வேடிக்கையுடல்லாசமுடன்
தையலர்களுடனே கூடியே ஸ்ரீகிருஷ்ணதேவர்
சம்பிரமுடனே வந்துதோணினார்-ருக்மணி

பொது வசனம்.

இவ்விதமாக ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி கொலுவாக வீற்றிருக்கும்போது ஸ்ரீகிருஷ்ணதேவரைக்கண்டு தோத்தரிக்கும்படி மாதவியென்னும் கோபிகாஸ்த்திரீகள் வருகிற விதங்காண்க.

மாதவி சொல் கவி.

அந்தரசபையில்ராஜர் அரிகரியென்னவேதான்
தந்தியின்துதிக்கைபோலே தாமொருபாமேயாட
வந்தவளொருத்தியின்கண் மயிர்கலைந்துலங்கநல்ல
சுந்திரமெனவேகுட்டி மாதவிதோன்றினாளே.

மாதவி வருகிற தரு.

வந்தேனம்மாவந்தேனம்மா மாதவிப்பெண்கள்-வந்
கண்டேனம்மாகண்டேனம்மா கன்னிப்பெண்களா-கண்
வந்தேனம்மாவந்தேனம்மா வஞ்சியிளங்கொடி-வந்
கண்டேனம்மாகண்டேனம்மாநல்ல வாலமோகினி-கண்

மாதவி சொல் வசனம்.

அகோ வாருங்களடி கோபிகாஸத்திரீகளே ஸ்ரீகிருஷ்ணதேவரை அஷ்ட்ட லக்ஷிமிகளெல்லாம் தோத்திரம் செய்கபடியால் நாமும்போய் சேவித்து அழைத்து வருவோம் வாருங்கள் கோபிகாஸ்த்திரீகளே.

கோபிகாஸ்த்திரீகள் தோத்தரிக்கும் தரு

ராதாலோலாலக்ஷிமிலீலா மாதவாகேசவாவைகுந்தவாசா ராதா
கந்தமுகுந்தாகவதீதசோரா மந்திராதாராமறையுருமார்பா ராதா

சிந்துகெம்பீரசெங்கல்வராயாநந்தகுமாரா அசோதைமைந்தாராதா வேணுகோபாலாவிஜயனுகூலா தானுரைசிபாலாதயித்திரியகாலாரா பன்னகசயனுடங்கஜவதனு கன்னியரேகனுகவுஸ்துவபரனாராதா கெருடதுரங்காகனகாப்பிரதங்கா கருணைதாரங்காகஸ்தூரி பங்கா விரைமலாவதனுவேண்டினேனுதா கரிகிஷ்ணவரதாகழலடிபோற்றி.

பொது கவி.

நாரணன்வந்தபின்பு நன்மைசேர்மாதரான
சீருள்ளமித்ருவிந்த செல்விருக்மணிகாளிந்தி
வாரணிமுலையாள்சாம்பவதியுடன்லக்ஷ்மிதேவி
கூசியப்பெண்களெல்லாம் கும்மிகளாடலுற்றார்.

பொது-வசனம்.

இவ்விதமாக கிருஷ்ணமூர்த்தியைகோபிகாஸ்திரீகள் தோத்தரித்துப்போனபின்பு சத்தியபாமாருக்மணி காளந்தியின்னும் சிலபெண்களும்கூடிக்கொண்டு கும்மியடிக்கிர விதங்காண்க.

ருக்மணிசத்தியபாமாசொல்-தரு.

வாருங்கடிதோழிப்பெண்களா மகிழ்ந்துகும்மியடித்தாட
சேருங்கடிபெண்களெல்லாம் ஸ்ரீகிருஷ்ணதேவர்முன்னே
ஆடுங்கடிகரிவரதர் அழகுக்கொருபதமெடுத்து
பாடுங்கடிநாகத்தின்மேல் பள்ளிகொண்டநந்தர்முன்னே
சீர்இரந்தனுவிலிடும் திருமணிக்கழகுடனே
கார்போன்றமேனியனும் கனகிரீடம்தன்னழகும்
காதிலிடும்குண்டலமும் கவுஸ்துமாமணியழகும்
சோதிரத்னமாமணியும் துளபமாலையினழகும்
காதல்மிகுமார்பில்நல்ல சனத்தசங்கும்திகிரிகளும்
பரிவுடனேசாரங்கமும் பஞ்சாயிதத்தழகும்
மங்கைரதியூர்வசிபோல் வாருயர்ந்ததோகையரே
தங்கமடமங்கையரே தையல்முத்துமோகினியே-வாரு

ருக்மணி சொல்-கவி.

கோதயரெல்லாங்கூடி கும்மிகளாடிப்பாடி
சீதரநந்தகிருஷ்ண தேவகிசுதனேயென்று



காதலாயென்னையாளும் கரியமால்வரதராயா
நாதனேநின்றாள்போற்றி நலமுடன்போற்றினேனே.

பொது-வசனம்.

அகோ தெப்படி யென்றால் அஷ்டலக்ஷிமிகளுடனே கிருஷ்ணதேவர் கொலுவாகயிருக்கும்போது அஸ்தினபுரியிலிருந்துவிதுரமகாராஜன் துவாரகைக்கு வருகிரவிதங்காண்க.



விதுரன் வருகிர-கவி.

கொர்தலத்துடையோன்தானும் கொலுவினிலிருந்தபோது
சுந்திரசுபத்ரைதன்னை சுகதுரியோதினர்க்கு
வந்துமேகல்யாணத்தைவகையுடன்முடிக்கயெண்ணி
தந்திரவிதுரன்வில்லில்சமர்த்தனும்வருகின்றானே.

விதுரன்வருகிர-தரு.

தூரியதிரவேதிரைகடல்வாடவேதேருடனேகள்சேனைபுடைசூழவே
கூரியகவரிகள்குடைகொடிபிடிக்கவே வீரியக்காரருடன்விதுரனுதோ
பருதிநுதித்தாற்போல பார்த்திபர்புடைசூழ[ன்றினனே
குருகுலசிகாமணியும் கொற்றவரும்தோன்றினரே

சித்திரச்சிலம்பசைய செம்பொன்மணித்தேரேறி
அர்த்தராவில்சேனைசூழ அரசன்வந்துதோன்றினாரே
புத்தியுள்ளமந்ரிமார்கள் புரவலர்கள்புடைசூழ
வெற்றிவேல்விதுராராஜன் விருதுடனேதோன்றினாரே
மோதும்பேரிகைமுழங்க முத்துநாகசுரம்பாட
ஓதும்வேதியர்சூழ உம்பர்களதிசயிக்க
மாதுரதிபோலேபெண்கள் மங்களமகங்கமெனவு
ஆதியானவிதுராராஜன் அரசன்வந்துதோன்றினாரே-துரி

கிருஷ்ணமூர்த்திசொல்-கவி

விதுரரேசொல்லக்கேளீர்வீருள்ளதிருதராஷ்ட்டன்
துதிபெரும்கிருபர்துரோணர்துரியோதனுதியர்கள்மற்றோர்
அதிரதர்முதலாயுள்ள அஸ்த்தினபுரத்துவேந்தன்
யிரதகஜமுடனேவந்த காரியமியம்பிடீரே.

கிருஷ்ணமூர்த்திசொல்-வசனம்.

கேளும் விதுரமகாராஜனே அனேகம்ராஜாக்கள் மந்திரிப்பிரதானிகள் சூழத்தக்கதாக நீர்வந்தகாரியங்களை யின்னதென்று தெரியச் சொல்லவேண்டும் மகாராஜனே.

விதுரன் சொல்-கவி.

கொந்தலத்துடையோனெங்கள் குலதுரியோதனர்க்கு
சுந்திரமாதுவான சுபத்திரைப்பெண்ணைநீங்கள்
தந்திடவேண்டுமென்று சம்மந்த முறைமைபேச
வந்தனனரசேயெங்கள் மகிபனேபுகலுவீரே

விதுரன் சொல்-வசனம்.

வாருமையாசுவாமீவாசுதேவா பலராமரே உக்ரசேன மகாராஜனேகிருஷ்ணமூர்த்தியே கேளுங்கள் நான்வந்தவிபரம் யென்னவென்றால் ராஜாதிராஜன் ராஜகெம்பீரனான துரியோதனமகாராஜனுக்கு உங்கள் தங்கையாகிய சுபத்திரையைக் கேழ்க்கவந்தேனையா சுவாமி கிருஷ்ணமூர்த்தியே.

பலராமர்கிருஷ்ணமூர்த்திசொல்-கவி.

அம்புவில்லவரேகேளீர்அஸ்த்தினபுரத்துவேந்தன்
யின்பமாய்நீங்கள்கூடியெழுதொனுவடிவிநானே



சம்மந்தம்செய்வதற்கு தடையொன்றுமில்லைசொன்னேன்
தெம்புடன்தங்கைதன்னைதருகுரோம்தருகுரோமே.

பலராமர் சொல்-வசனம்.

அகோவாரும் விதுரமகாராஜனே யெசக்ரேஸ்பரனாகிய துரியோதனமகாராஜனுக்கு யெங்கள்தங்கையாகிய சுபத்திரையைக் கொடுக்க சந்தேகமென்னயிருக்கிறது அப்படியே தருகிறோமையா விதுரமகாராஜனே.

பொது-கவி.

தருகிறேனென்றபின்பு தரும்புகழ்விதுராராஜன்
வருகிறேனென்றுசொல்லி மனமகிழ்ந்திருந்தகாலை
விருதொடுகொலுவிருந்தவேந்தர்க்குவிடையளித்து
புரிதொழிவிருக்கைதன்னில் புக்கினஅரசர்சொன்னார்

பொது-வசனம்.

இந்தப்பிரகாரமாக விதுரமகாராஜன் சுபத்திரையை துரியோதனனுக்கு அமைத்துக்கொண்டு அஸ்த்தினபுரத்திற்கு போனபின்பு அர்ச்சுனமகாராஜன் தீர்த்தயாத்திரையாக புறப்பட்டு தேசங்களெல்லாம்திரிந்து வடமதுராபுரிக்கு வருகிறவிதங்காண்க.



அர்ச்சுனன் சொல்-கவி.

புக்காதகாலந்தன்னில் பூண்டசீர்பாண்டுஜெகில்
மிக்ககெம்பீரதீரன் விஜயன்பிராமணனுமாக

திக்குள்ளபுண்யதீர்த்தம்தேடியே ஆடவேண்டி
தக்கசன்னாசிவேஷம் தரித்துமே வருகின்றனே.

அர்ச்சுனசன்னாசிவருகிற-தரு.

சிந்தையில்மகாமோதி தேசமெங்கும்தீர்த்தமாடி
சுந்திரமாகயிவன் சுருதிக்குடையசீலன்
தூர்ந்தரன்தனஞ்செயன் தோன்றினனே
அரிகரியென்றுசொல்லி அரனைநினைத்துப்பின்னும்
அரும்புனலாடி குருபதம்தேடி
சிவபூசைகுருபூசை யென்றுமேமறவாத
தூர்ந்தரன்தனஞ்செயன் தோன்றினனே
கோகர்ணப்பதிதனில் யிருக்கமனம்கொண்டு
குருக்கள்வசிஷ்டர்வியாசர் அவரையும்கண்டு
காருத்தன்வளர்ககர் காணவேவந்து
கானகத்திடையினில் யேகினரே-சிந்தை

பொது-கவி.

தனஞ்செயன்ஸ்தலங்களெல்லாம் சத்தியதீர்த்தமாடி
மனஞ்சுகம்பெறவேபூங்கா வனத்திலோரிடத்தில்நின்று
தினஞ்சிவபூசைசெய்து ஜெபதபம்செலித்திசெங்கோல்
அரஞ்செறிநடையாய்பங்கர் அருமைபூண்டிருந்தானன்றே.

பொது-வசனம்.

அகோ தெப்படி யென்றால் அர்ச்சுன மகாராஜன் ஸ்தலங்கள் தோறும்சென்று தீர்த்தமாடிவடமதுராபுரிபட்டணம் வந்துசேர்ந்த போது அந்தசேதி கிருஷ்ணமூர்த்திக்குத்தெரிந்து கெருடவாகனரூடராய அர்ச்சுனனைக்காண வருகிறவிதங்காண்க.

கிருஷ்மூர்த்திவருகிற-கவி.

யிருந்திடும்வேளைதன்னில் யிஷ்டமாய்கிருஷ்ணதேவர்
வருந்தியேதுயரமாக மகாதுவாரகையைவிட்டு
பொருந்தியேவனத்துக்கேகிபுஜபலன்தன்னைக்காண
அருந்தவேகெருடனேறிஆதியால்வருகின்றாரே.

கிருஷ்ணமூர்த்திவருகிற-தரு.

கெருடவாகனமேறியே அர்ச்சுனன்பக்கல்
கிருஷ்ணதேவரும் நடந்தார்



மறையவர்தான்புகழ கிருஷ்ணதேவர்
வனந்தன்னில் தானுமேகினார்
மெய்யில்பீதாம்பரங்கள் தனையுடுத்தி
வேதசங்கீதம் பாடவே
தையலர்ஆலமேந்த அர்ச்சுனன்பக்கல்
தாமோதரரும் நடந்தார்
நந்தகோவிந்தாவென்று ரிஷிகளெல்லாம்
நாதன்முன்னே நடக்க
சிந்தைமகிழ்வாக அர்ச்சுனன்பக்கல்
சொருசுடன் தானுமேகி
நாராயணாவென்றுசொல்லி முனிவரெல்லாம்
நன்மலர்பாதம் தொழவே
காரியமாகவேதான் அர்ச்சுனன்பக்கல்
கரிவரதரும் தானடந்தார்
பட்டுப்பீதாம்பரங்கள் ஒளிபெறவே
பாதச்சிலம் பொலிக்கவே
நட்டணையாகவேதான் அர்ச்சுனன்பக்கல்
நாராயணர் நடந்தார்-கெருட

அர்ச்சுனன் சொல்-கவி.

கண்ணனேபோற்றிநாபிக் கமலனேபோற்றிபோற்றி
வண்ணனேபோற்றிதீர்த்த மாதவாபோற்றிபோற்றி
ஒண்டியாயெந்தன்முன்னே உகந்தோர்கெருடனேறி
நண்ணியேவந்த சேதிநவிலுவீர்நவிலுவீரே.

அர்ச்சுனன் சொல்-வசனம்.

அகோகேளும் ஆபத்பாந்தவா அனாதரக்ஷகா ஜானகிபிராணநாயகா சங்குசக்காராயுதா தாஷ்டிகமர்த்தனா கோவர்த்தனகிரி வல்லபா கோபாலா ஸ்ரீமணாளா அனந்தகல்யாணகுணா அஷ்டலக்ஷ்மி சமேதா அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகா அடியேன்கண்ணுக்குநிமை போலேகார்த்து வரப்பட்டகர்த்தனே சருணம் சருணமையாசுவாமிபகவானே.

கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

அகோவாரும் பிள்ளாய் கிரீடியாகிய அர்ச்சுனமகாராஜனே நீ என்னால் வந்தேயுண்டானால்மகாராஜாக நீற்காய்சுபெற்று சுகமாய்வாழக்கடவது யொழுந்திரும் அர்ச்சுனமகாராஜனே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோ கேளுமையா சுவாமி பகவானே தாங்கள்மாத்திரம் களித்து யென்னிடம்வந்த காரியார்த்தங்களை யெனக்குத் தெரியும்படியாகச் சொல்லவேண்டும் கர்த்தனே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

வீரனே சொல்லக்கேளாய் விளர்பிம்சுபத்திரைதன்னை
தாரமாயடையலாமென் சகாயமுண்டுபாயம்சொன்னேன்
சீரியபெரியோர்ப்போலே திருத்தெண்டுசன்னாசியாக
பூரணமானவேஷம்போட்டுமேவருகுவாயே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும் மைத்துனனாகிய அர்ச்சுனமகாராஜனே யென்னுடைய தங்கையாகிய சுபத்திராதேவியை துரியோதன மகாராஜனுக்குக் கேழ்க்காங்கள் கொடுக்குரோமென்று யென்தமையனாகிய பலராமர் சம்மதித்திருக்குரார் ஆகையால் அதற்குமுன்னமே நீ விவாகம்செய்துக் கொள்ளவேண்டும் அதற்கு யொருயோசனையிருக்கின்றது அதுயென்னவென்றால்நீதிருத்தண்டுசன்னாசியாகமாறு வேஷம் கொண்டுவாரும் பிள்ளாய் அர்ச்சுனமகாராஜனே.

அர்ச்சுனன் சொல்-சிசபத்தியம்.

வாயிளங்காயுமூன்று வகையெனும்பவமுராத
நாபெரும்வேஷமே கொள்ளுமென்றீர்
தாயென்றும்பெண்டுபிள்ளைகளும்நல்ல
சன்னாசியாருக்குத்தானுமுண்டோ
ஆயனேமனதுதனைசோதித்தீர்
அனந்தசெயநேத்ரனே அரியேயெனயா
மாயவனேகேசவனேநவரத்னமார்பனே
மாயவாயிதுவார்த்தைமரந்திடீரே.

• அர்ச்சுனன் சொல்-வசனம்.

அகோ கேளுமையா சுவாமி அனந்தசயனா நீர்யெனக்குநல்ல வார்த்தைச்சொல்லவந்தீர் நான்திருத்தெண்டுசன்யாசி உருவம்யெடுத்துக் கொண்டுதிரிந்தால் மருபடியும் விவாகம் செய்துக் கொள்ளலாமோ யென்மனதை சோதிக்கும்படியாக வல்லவோ யிந்த வார்த்தைகளைச் சொல்லவந்தீர் தாங்கள் யென்னுடையயெண்ணத்தை மரந்துவிடும் பகவானே.



கிருஷ்ணமூர்த்தி சொல்-கவி.

மரந்திதுமாசேதிருச்செத்தியாவதெல்மந்தரம்
சிரந்தகாயேஸ்த்ரீபூனால்சியதபம் புகலயாவும்
அரந்தவர்தமக்குப்பின்புசுகமனுப்விப்பதாக
இருக்திதண்டுசன்னாயானால்திரும்பவும்விரும்பலாமே.

கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

அகோவாரும் மைத்துனனாகிய அர்ச்சுன மகாராஜனே அதினாலே யாதொன்றும்தோஷமில்லை சந்தேகப்படவேண்டாம்திருதெண்டுசன்னாசியாகவேஷமெடுத்து வாரும்பா அர்ச்சுனமகாராஜனே.



அர்ச்சுனன்சன்னாசிவேஷமெடுக்கும்-கவி.

விரும்பியதெண்டுங்காவி வேஷமாய்க்கரிண்டல் -
விரும்பயமொழிக்குபூமி மானிடாருங்காண -
உரம்பவிலமனமுங்காவி யுடைக்குடைதுடையுமாக
அரும்பியசன்னாசிபோல அர்ச்சுனன்தோன்றினானே.

அர்ச்சுனன்சன்னாசியாகவருகிற-தரு.

சன்னாசிவேஷமாகினான் தனஞ்செயனும்
மின்னாசைகொண்டுவாடிகான்

விமலாடிசிரசின்மீதில் வித்தகனும்வைத்ததுபோல்
நிமைமுடிகொக்கைப்போலே நிஷ்டையிலிருந்தான்பேசி
ஆண்டர்கள்முனிவர்கள் அதிசயிக்கவே
அரியோஅரியென்றுசொல்லி அரும்புனலாடிவர
சருவிதக்கன்னாதிகளை யொடுக்கியேயிந்த
கானகத்திடையினில் யேகினானே
பார்த்தவர்க்குமெத்தமெத்த பரமாத்துவமென்று
தோற்றும்படிசன்னாசியாய் தோன்றினாரே-சன்னா

கிருஷ்ணமூர்த்தி சொல்-கவி.

தோன்றியசன்னாசிதான் சொல்லுவேன்னிருபாகேளும்
நான்துவாரகைக்குச்சென்று நாளையான்மீளுங்காலே
வானிடம்குவடுநீண்டமலைமுழுஞ் செடியிற்புக்கி
ஊன்றியதபத்தோர்போல உறங்குவாய்உறங்குவாயே

கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அர்ச்சுனா நான்நாளையத்தினம் வசுதேவர்பலராமர் உக்கிரசேனன் முதலானபேரும் யிவ்விடத்திற்குவருவோம் நீர்யிவ்விடத்திலேதானே மகாதபசியைப்போல் உறங்கிக்கொண்டு யிந்தகானகத்தில் யிருமென்று அர்ச்சுனனுக்கு சொல்லிவிட்டு கிருஷ்ணதேவர் தமையனாராகிய பலராமரிடம் வந்து சொல்லுகிறவிதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அனைவரும்புகழும்வேந்தர் அருளும்உக்கிரசேனன்
மனைபலபத்ராமர் மருத்துவமற்றுள்ளோரே
புனவனபோஜனத்துக் கின்றுநாம்போகவேண்டும்
தினம்பலபத்ராமர் சொகுசுடகேகுவோமே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோகேளும் தமையனாரே நாளயதினம் நல்ல புண்ணியகாலமாகயிருக்கின்றது நாமனைவரும் வனபோஜனத்துக்கு போய்வருவோம் வாருங்களையாசுவாமி



வனபோஜனத்திற்குபோகும்-தரு.

போவோம்வாரீர்வனத்திற்கு போவோம்வாரீர்
போவோம்வாருமிந்த புண்ணியகாலத்தில்
கூவும்குயில்மயில் கொஞ்சும்வனத்துக்கு-போ

பூங்காவனந்தனிலே யிந்தபுண்ணியகாலத்திலே
பாங்கானபிராமணாள் நம்மைபார்த்துபுகழ்ந்திட
நீங்காமல்வருண்டம் நேருமெளிதாக-போ

தர்மம்பெரிதல்லவே அந்த சங்கார்க்கொப்பிதமாய்
வர்மங்களில்லாமல் வாரும்மனிதரே
கர்மவினைகளை கடுகத்துரத்துவோம்-போ

னந்தனென்றுசொல்லிமனிதரே நாவில்துதித்திடுங்கள்
சிந்தனையில்லாமல் சேர்வோம்திருவடி
சந்தேகமெண்ணாமல் தர்மத்தைசெய்யுங்கள்-போ

பொது கவி

நருந்திசழ்க்களபம்பூசி நாவலர்முதலோரெல்லாம்
பொருந்தியவனத்திலேதான் போஜனமானபின்பு
விருந்துண்ணுமனைவோர்நெஞ்சம் விச்சியகொக்குபோலே
யிருந்தசன்னாசிமுன்னே யாவருமேகினாரே.

பொது வசனம்.

இவ்விதமாக பலராமர் சாத்தகி கிருஷ்ணமூர்த்தி உக்கிரசேனன்யின்னம் அனேக மன்னர்களும் குழந்தக்கதாக கானகம்சென்று வனபோஜனம்செய்து கானகத்தில் யிராநின்ற சன்னாசியைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க

பலராமர் சொல் கவி.

யேகியேயெதிர்குலேசன் யிருந்தசன்னாசிமுன்னே
ஆகமும்புளகமாகி அடியினைத்தொழுதுபோற்றி
யோகமாயிருக்கவென்றால் உரைவிடமுண்டுகண்டீர்
நாயினைதக்கண்டுயெந்தன் நகர்தனில்வருகுவீரே.

பலராமர் சொல்வசனம்.

சருணம் சருணமையாசுவாமி தங்களைப்பார்த்தால்மகாபெரியவரைப்போலே காணப்படுகிறது யிந்த ஆரண்யமான கானகத்திலே

நீர் தனியாயிருக்கவேண்டியதென்ன நம்முடைய பட்டணத்திற்கு யெழுந்தருள வேண்டுமையா சுவாமி தபசியே.

பொது வசனம்.

இவ்விதமாக பலராமர் சன்னாசியைப்பார்த்து பட்டணம் வாருமென்று அழைத்தமாத்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணதேவர் தமையனாகிய பலராமரைப் பார்த்து கிஷ்ணமூர்த்தி சொல்லுகிறவிதங்காண்க

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

காட்டிலிருந்தவரை — கண்டுமனமகிழ்ந்து
நாட்டில்வருவீரென்று — நவிலவேண்டாமே

பலராமர் சொல் தரு.

நவிலவேவேண்டாமென்று — நலமாகப்பேசுராய்
புவியில்பெரியவரை — போல்கண்டதில்லை

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

கண்டதுண்டோவென்று — கனமாகப்பேசுராய்
துண்டசன்னாசியரை — துணையழைப்பானேன்

பலராமர் சொல் தரு.

அழைப்பதேனென்றுசொன்னீர் — அருமைத்தபசியரை
பிழைப்பைநீகெடுக்குராய் — பேசாதேபோம்போம்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பேசாமல்போவென்று — பெருமையாயுரைத்தீரே
தேசமரியாதோதான் — திருட்டுசன்னாசியை

பலராமர் சொல் தரு.

தேசமரியுமென்றீர் — தேசிகனதனை
காசியிலேகண்ணாலே — கண்டதுமுண்டோசொல்வீர்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

கண்டதுண்டோவென்றீர் — களவுசன்னாசியரை
அண்டியிருந்தால்நமக் — கழகல்லஅய்யாவே

பலராமர் சொல் தரு.

அழகல்லவென்றுசொன்னீர் — அவர்க்குமனதுநோக
சிறுமைகள்சொல்லாதீர் — தேசமழிந்துவிடும்



கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

தேசமழியுமென்று — சீருடனுரைத்தீரே
போராவாரவர்தனை — பூசிக்கலாமோ

பலராமர் சொல் தரு.

போராவாரவரென்று — புலம்பிசொன்னாய்கிஷ்ணா
புண்ணியரிவரைப்போலே — காணேனே

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

காணேனேயென்றுசொல்லி — கனமாகப்பேசுறீர்
தோணுதுமக்கிப்போ — சொல்லக்கூடாதே

பலராமர் சொல் தரு

சொல்லக்கூடாதென்று — சொன்னீரேகிஷ்ணனீர்
வல்லவரேயிந்த — வாகுள்ளமுனிவரை

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

வல்லவரென்றுசொல்லி வரிசையாயுரைத்தீரையா
நல்லவரென்றுநீர்தான் நாட்டினிலழைப்போமென்று
அல்லல்தானேருமிப்போ அருமைகள்குறையுமய்யா
சொல்லியவசனமெந்தன் துணைவரேமறந்திடீரே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

கேளும் யெனது தமையனாரே யிந்தசன்னாசியை மகாவல்லவரென்று நமது பட்டணம் அழைத்துப்போவோமென்று சொல்குரீர் அப்படியிவரை அழைத்துக் கொண்டு போனால் கெடிதிசம்பவிக்கும் அந்தவார்த்தையை மறந்துவிடும்யெனது அண்ணாவே.

பலராமர் சொல்-கவி.

மறந்திடீரென்றுசொன்ன மன்னவாகிருஷ்ணாகேளாய்
துறந்தவர்தம்மைவிட்டு துரிதமாய்கருக்கேகி
வனந்தனிலிருப்பதேது மவரையுமழைத்துக்கொண்டு
துலைவிடம்தன்னில்வைத்து தொழுதுநாம்வாழலாமே

பலராமர் சொல்-வசனம்.

கேளும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே யிந்தசன்னாசியானவர் யில்லத்தைவிட்டு தூரமாகிவனத்திற்குவந்திருக்கிறவரை நாம் நேத்

திரத்தினால் பார்த்துப்போவது சரியல்லாமலவரை அழைத்துக்கொண்டுபோய் நமது பட்டணத்திலிராவின்ற மடாலயத்தில்வைத்துபிரதி தினமும் அவரைத்தொழுது வாழ்ந்திருக்கலாம் தம்பி கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல்-கவி.

வரும்பலபத்ராமா மன்னா சன்னாசியார்க்கு
ஒருவர்கள் துணையென்வாழ்வென் உரைவிடம்தானுமென்றே
அரசர்களுரவேனிப்போ அழைத்தாலும்வருவாரோதான்
தருமயோகிரேநெஞ்சம் தருதலைகருமமன்றே.

கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

கேளுமையா சுவாமி தமையனாரேயிந்தசன்னாசிக்கு ஒருவருடைய துணையேன் வாழ்வும் உரவும்யேன் அரசர்களுடையதயவேன் அப்படியிருக்க அவரே நமதுபட்டணத்திர்க்கு வாவென்று அழைத்துக்கொண்டுபோய் விட்டால் பாவத்திர்க்குயிடமாவதன்றி வேறில்லை தமையனாரே.

பலராமர் சொல்-கவி.

கருமங்களின்றுசொன்ன கண்ணனைக்கண்ணால்நோக்கி
சிருபலபத்ராமன் சினத்துடன்மகிழ்ந்துசொல்வார்
ஒருவரும்குறைகபிடவாடி உரங்கலுமுரமையல்ல
பழியதுநோமற்றான் பட்டணமேகுவோமே

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் பலராமர் கிருஷ்ணமூர்த்திசொன்ன வார்த்தையைக் கேளாமல் மனமகிழ்ந்துசன்னாசியாரைகாட்டில்தனிமையாகவிட்டுப் போகிறதுமுரமையல்லவென்று மனது சந்தோஷமாக துவாரகாபுரிக்கு சன்னாசியை அழைத்துக்கொண்டு போகிரவிதங்காண்க.

பலராமர்தன்னகரத்துக்குவருகிற-தரு.

பன்னுமறையோர்கள் சூழ பலபத்ராமருடன்
மன்னவர்கள்புடைசூழ மாதரிசைபாடியாட
வர்ண்ணமானகுடைகள்கோடி வானவர்கள்புடைசூழ
மன்னுமாமுனியும்கூட மாமுனிவர்தோன்றினரே



ஆனைப்படைதேர்கள்சூழ அலரவரதங்கனேர
சேனைகளும்புரவியேக காவலனும்தோன்றினனே
யெதிர்குலத்தவர்கள்சூழ யிருபுரம்கவரிவீச
மதிகுலத்துதித்தமன்னன் மாமுனிவன்சேர்ன்றினனே-பன்னு

பொது-கவி.

தனுமாரன்கணையின்றெத்த தபத்துளசுபத்ரையென்று
அனுமான அயிராதப்பெண்ணை அனுதினம்யெண்ணியெண்ணி
மனமாய்கைகொண்டுயெங்கி மடத்திலிருக்கும்நாளில்
கனமாரிகாலம்வந்து காய்ந்ததிற்பேய்ந்தகாலே.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் சன்னாசியாகிய அர்ச்சுனமகாராஜனை பலராமரும் கிருஷ்ணமூர்த்தியும் துவாரகாபுரியில் யிராவின்றமடாலயத்தில் தபசியைக்கொண்டுபோய் விட்டிருக்கின்றபோது அர்ச்சுனமகாராஜன் யென்னேரமும் சுபத்திரையை மனதில்நினைத்து யெப்போ வருவாளோவென்றும் பெண்ணே கண்ணேயென்றும் மனதில் நினைத்து யேக்கம்கொண்டு யிருக்கிரபோது ஒருநாள் மாரியானது பேயும் காலமாகி அதிகமழை வருஷிக்க அப்போது பலராமர் சொல்லுகிர விதம்காண்க.

பலராமர் சொல் கவி.

இனிவரும்புகழும்நெஞ்சில் யிஷ்டமாகிஷணேகளாய்
கனமழைக்குளிருமுதல் காத்தினையாற்றப்போமோ
தினம்தோரும்நனையமாட்டார் செய்தொழிற்காருமில்லை
மனைதனிலழைத்துவந்து மடத்தையும்நிருத்துவோமே.

பலராமர் சொல்-வசனம்.

அகோவாரும் தம்பிகிருஷ்ணமூர்த்தியேநாம்சன்னாசியையழைத்துவந்திருக்கிரபடியினாலும் அவரைதனியாகவிட்டு யிருக்கக்கூடாது அதுயென்னகாரணமென்றால் மழையானது வருஷித்து குளிர் அதிகமாயிருக்கிரபடியால் அவரை நம்முடையயில்லரமாகிய அரண்மனைகரு அழைத்துக்கொண்டுவந்து சவரக்ஷணை செய்யவேண்டும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு.

மடத்திலிருப்பவரை    அண்ணாவேநமது
மனையிலழைக்கலாமோ    அண்ணாவே

பலராமர் சொல்-தரு.

வேண்டாமென்றேயுரைத்தால்    சன்னாசியவருமே
மெலிந்துமயங்குவாரே    கிருஷ்ணமீவா

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு.

மயங்குவாரென்றுசொன்னீர்    அண்ணாவேநீர்
வாதுசெய்யாதே    போமையா

பலராமர் சொல்-தரு.

வாதுதானேதுக்கடா    சன்னாசியவர்-ஒரு
வார்த்தைசொன்னால்பாபம்    நேருமோடா

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு.

பாபங்கள்சேராதையா    சன்னாசியவர்
பயித்தியக்காரனையா    அண்ணாவே

பலராமர் சொல்-தரு.

பயித்தியக்காரனென்றாய்    சன்னாசியவர்
பரிதேசியல்லவோதான்    கிருஷ்ணா

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு.

பரிதேசியென்றுசொன்னீர்    அவனுமெத்த
பாரசமுசாரி    அய்யா

பலராமர் சொல்-தரு,

சமுசாரியல்லவடா    கோபாலகிருஷ்ணா
சல்தியாயழைப்போம்    வாடா

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு

அழைப்போமென்றேவசனம்    யெங்களண்ணாவே
அடியேனுக்    காகாதையா

பலராமர் சொல்-தரு.

ஆகாதுயென்றுசொல்லி    பெரியவரை
அகந்தைகள்    செய்யாதடா



கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அகந்தைகள்சேருமையா    சன்னாசியவர்
அரண்மனைக்    கூடாதையா

கிருஷ்ணமூர்த்தி சொல்-கவி

மூட்டியவில்லுமன்னாமூர்க்கர்சன்னாசியாரை
காட்டினிலிருந்தன்னாளில் கண்டுநீர்கொண்டுவந்து
நாட்டினில்மடமுங்கட்டி நடத்துதல்போதாதென்று
வீட்டினிலழைப்போமென்றீர் வேண்டுதல்செய்குவீரே.

கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

கேளுமையா தமையனாரே கானகத்தில் திரியப்பட்ட சன்னாசியைக் கொண்டுவந்து நமது நாட்டில் மடாலயங்கட்டிவைத்து அந்த மடத்தில் சுகமாகயிருக்கின்ற சன்னாசியை வீட்டிற்கு அழைத்துக் கொண்டுவந்து வைத்தால் அபகீர்த்திக்கிடமாகும் ஆகையால் யிந்த வார்த்தையை மரந்துவிடும் அண்ணாவே.

பலராமர் சொல் தரு.

யெதிர்த்துவார்த்தைகள்சொல்லி    கிருஷ்ணாயிந்த
யெடக்குகள்    பேசாதடா
யின்பங்களித்துநீ    துன்பமாய்பேசாதடா
கோபாகிருஷ்ணா    யெதிர்த்து

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு.

துடுக்குப்பேசாதேயென்று    சுருக்காகப்பேசுநீர்
அடுக்காதுநமக்கிது    அரசுக்குப்பழிப்பாகும்
துடிக்காதே    போம்போமையா
யெனதுஅண்ணா    துடுக்குப்பேசா

பலராமர் சொல்-தரு.

போம்போமென்றுசொல்லி    யெந்தனுக்கிப்போ
புத்திசொல்கிறா    யென்னடா
புத்திசொல்கிறாயெந்தன்    பக்திவிஸ்வாசங்கள்
சற்றுமறியாயோடா    தம்பிகிஷ்ணா-போம்

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு.

அரியாயோவென்றுதான் யெந்தனையிப்போ
ஆகாத்தியம் பேசுகிரீர்
ஆகாத்தியம்வருமிந்த ஆண்டியினாலிப்போ
அழைப்பிக்கப் போகாதையா-அரியா

பலராமர் சொல்-தரு.

ஆகாதுவென்றுசொல்லி தபசியைநீமெத்த
அழும்புகள் செய்யாதடா
அழும்புகள்பேசினால் அரசழிந்திடுமிப்போ
பழியேற்றுக் கொள்ளாதடா

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு.

பழிமெத்தவருமென்று யெங்களண்ணா
பயந்தீரோ சன்னாசிக்கி
முழுதுமுடவரெத்த முகத்தின்முன்னாகாது
மோசங்கள் ஆகுமையா-பழிமெத்

பலராமர் சொல்-கவி.

செப்பெரும்யெனது தம்பி சிறுபிள்ளைவிளையாட்டல்ல
யிப்புவிநன்மைதிமை யெவைகளுமரியமாட்டாய்
சொர்ப்பெரியவரைப்போலே துரந்தவர்கண்டதுண்டோ
அர்ப்பமாய்சொல்லும்வார்த்தை யிப்புவில்தருமந்தானோ.

பலராமர் சொல்-வசனம்.

கேளும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே யிந்தசன்னாசியாரை நமது அரண்மனையில் கொண்டுவந்து வைப்போமென்றால் நீஅதைக்கேளாமல் சிறுபிள்ளைத்தனமாகப்பேசுகிறாய்யிப்பிரபஞ்சத்தில் வழங்கி வருகிற நன்மைதீமைகளை நீயரியமாட்டாய் ஆகிலும்யிந்த பெரியவரைப்போலே யெங்கேயாகிலும் கண்டதுண்டோ ஆகையால் அவரெல்லாவிருப்பங்களையும் நீக்கியில்லாத்தைவிட்டு துரவரமடைந்த மகாபெரியவரை மனதுநோகச் சொல்வது உனக்கு தர்மந்தானோ சொல்லும் தம்பிகிருஷ்ணா.

கிருஷ்ணமூர்த்தி சொல்-கவி.

நல்லசங்கீதமேளம் நாடகசாலைமேடை
மல்லிகைசுகந்தம்வாசம் மருவுநம்மனையில்வாழ்க்கை



யில்லினிலவரைவைத்தால் யிருப்பரோவிருப்பமன்றி
வெல்லரம்தரித்தாமா யேல்வரும்கருமம்சொன்னேன்.

கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

கேளும் யெனது அண்ணாவே நமதுஅரண்மனையில் நல்லசுகந்தமானவாசனைகளும் சங்கீதமேளவாத்தியம் சப்தித்துக் கொண்டிருக்குமிடத்தில் தபயோகியாகியசன்னாசியைக் கொண்டுவந்து வைத்தால் அவரிருப்பதற்கு விருப்பம் நேரிடும்யெல்லாம் துரந்தவர் அரண்மனையிலிருக்கமாட்டார் ஆகையால் பின்னால்வரும் அபகீர்த்தியை யிப்போது சொன்னேன் தெரிந்துக் கொள்ளும் அண்ணாவே.

பலராமர் சொல்-கவி.

சொன்னதுபோதுங்கிருஷ்ணா சொல்லைநீசொல்லவேண்டாம்
பொன்னுமண்ணைசைவிட்ட பெரியவராகுமன்றோ
சன்னாசியாருக்கேத்த தாகுதியுமெங்குமோங்கும்
மன்றுமோர்மனையில்வைத்து வாழலாம்வாராய்தம்பி

பலராமர் சொல்-வசனம்.

கேளும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே யிப்போது சொல்லியவார்த்தையைப்போல் யினியொருதரம் சொல்லவேண்டாம் பொன்பொருள்மண்ணாசையை விட்டுவந்தபெரியோராகிய சன்னாசியாருக்கு நாம் உதவிசெய்தால்தாகுதிவரமாட்டாது அவரைநமதுஅரண்மனையிலிருத்திவைத்து நாம் சந்தோஷமாகவாழ்ந்திருக்கலாம் அகோவாருமையா சன்னாசியே நமது அரண்மனைக்கு யெழுந்தருளும் சுவாமி சன்னாசியே.

கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

ஆ ஆ. கேளும் கேளும் ஓய் சன்னாசியாரே வருகிறகஷ்டம் யெனக்கு அக்கரையில்லை ஆனால் யெங்களுடைய அரண்மனைக்குயெழுந்தருளும் சுவாமிசன்னாசியே.

பலராமர் சொல்-ஜம்பை-தரு.

வாடைகுளிர்மழைகாத்தும் வாசமல்லவாசமல்ல
வீடுதனில்மடமுமுண்டு விரைவுடனேவாரும்
நந்தவனம்சாலைவாவி நல்லவகையெல்லாமுண்டு
வித்தையுள்ளமடம்தனக்கு மெள்ளவருவீரே

பிச்சையிடுவாருமுண்டு    பேச்சுதுணைவேணருண்டு
மெச்சிடவேமச்சியுண்டு    மெள்ளவெழுந்தருளுமையா

பலராமர் சொல்-வசனம்.

அஹோ வாருமையா சுவாமி சன்னாசியாரேநீரிந்தப் பனியிலும் ஊதலில் ஒண்டியாகயிருந்து கஸ்திப்படவேண்டாம் ஆசையால்கம்மிடையில்லாமாகிய ஆரண்மனைக்குப் போவோம் யெழுந்தருளுமையா சன்னாசியாரே.

அர்ச்சுனன்விடுதிக்குவருகிற-தரு

ஆண்டிக்கிழவனாகி    அம்மாபிக்ஷையென்றுசொல்லி
வேண்டியேசுபத்ரைபெண்ணைவிரும்பிவிரும்பிக்கொண்டு
தெண்டுடன்கமண்டலமும்    ஜெபதபமந்ரம்பேசி
கள்ளசன்னாசியாரும்    காணவேதோன்றினரே-ஆண்டி

பலராமர் சொல்-கவி.

இருந்தசன்னாசியாருக் கேவியேவேலைசெய்ய
பொருந்தியேகன்னியர்தப் புரத்துள்ளோரொருத்தராக
மருந்தெனும்மொழியாளான வாவியேவேர்வழியினாளை
துரந்தாயிருந்தபெண்ணை சுபத்திரைதனையழைப்பாய்

பலராமர் சொல்-வசனம்.

அஹோவாரும் தம்பி கிருஷ்ணமூர்த்தியே சன்னாசியாயிருக்கும் அடியவருக்கு பிரதிதினமும் பணிவிடைவேலைசெய்யவேண்டும் ஆகலால் நமது தங்கையாகிய சுபத்திரையம்மனை அதிக சீக்கிரம் அழைப்பியும் தம்பி கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அழைப்பிக்கவேண்டுமென்றீர்    சுபத்திரையை
அவரிடத்தில்    விடலாமோ

பலராமர் சொல் தரு.

அவரிடத்தில்விட்டாலென்ன    கோபாலகிருஷ்ணா
அட்டிசொல்லாதே    போடா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பேசாதேயென்றுசொன்னீர்    சுபத்திரையாள்
பெண்புத்தியைநீர்    அறியீரோ



பலராமர் சொல் தரு.

அறியீரோவென்றுசொன்னீர்    கோபாலகிருஷ்ணா
அருமைசன்னாசி    யவர்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சன்னாசிமார்க்கமெல்லாம்    யெங்களண்ணாவே
தானறியப்    போகாதையா

பலராமர் சொல் தரு.

வீண்ணுணக்காரனிடா    கோபாலகிருஷ்ணா
வீணுனவார்த்தை    சொல்கிராய்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பெண்ணாளசுபத்திரையை    சன்னாசிகண்டால்
பேராசைக்    கொள்வாரையா

பலராமர் சொல் தரு.

பெண்ணாசைமண்ணாசை    பொன்னாசைவிட்ட
பொய்யாததபசி    யிவர்தான்

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

தபசியென்றேயழைத்தீர்    அண்ணாவே
தரணியோர்க்    கடுக்குமோதான்

பலராமர் சொல் தரு.

அடுக்காதுவென்றுசொன்னீர்    பெரியவரை
அபவார்த்தை    பேசாதடா

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அபவார்த்தைநேருமையா    சன்னாசியாலே
அரசர்கள்    பழிப்பாரே

பலராமர் சொல்-தரு.

பழிமெத்தவாராதடா    சுபத்திரையை
பாங்காயழைத்து    வாடா

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

காசினிபுகழும்ராமாகாடுபோய் காடாய்விட்டாய்
போஜனம்செய்பாலாகி பூஞ்சோலையிருக்குமாகில்

பேசியேதடையும்கைகால் பிடிப்பதுபெண்ணுமானாள்
தேசமேயறியாளை சிரிப்புக்குயிடமதாச்சே.

கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

கேளும் யென்தமயனாரே கானகத்தில் சஞ்சரிக்கும்சன்னாசியைக்கொண்டுவந்து வீட்டில்வைத்து நெய்பாலுடன் சாப்பிடவுமாய் விட்டது அவன்கைகால் பிடிப்பதற்கு பெண்ணாகிவிட்டது யிந்த வார்த்தைகளை தேசத்தில் தெரிந்தால் நகைப்புக்கு யிடமுண்டாகும தமயனாரே.

பலராமர் சொல்-கவி.

ஆகுமென்றுரைத்தாய்கிஷ்ணா அவைகளைநினைத்தாயல்லால்
யோகியர்மனமும்வாக்கும் உரைகளுமறிந்ததில்லை
காகமேல்பரந்தாய்பூமி நடுங்கவென்றுரைத்தாயிப்போ
தோகையாளமுர்தப்பெண்ணை சுபத்திரையழைப்பிப்பாயே

பலராமர் சொல்-வசனம்.

கேளும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே அபகீர்த்தியானவார்த்தைகளைநினைத்தாயேதவிர யோகியாகயிருக்கப்பட்டவருடைய மனதில் யிருக்கும் உண்மைவாக்கியங்களை நீயறிந்ததில்லையோ ஆகையாலிந்த பூமியாத்தியதமும் நடுங்கும்படியாக நீர்யிப்போது சொன்னவார்த்தைசரியல்ல அப்படிக்கெல்லாம்குறைவுவரமாட்டாது நமது தங்கையாகியசுபத்திரையம்மனை அழைத்துவாரும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

யெத்தனைசொன்னாலு முந்தன்
சித்தமதிற் சேர்க்கலியோ-ராமா-பலராமா

பலராமர் சொல்-தரு.

குற்றமற்ற சன்னாசிமேல்
யித்தனைகொழுப் பென்னடா-கிஷ்ணா-மாயகிஷ்ணா

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு.

வேஷத்தைநீர் பார்த்தவுடன்
மெய்யென்று மலைக்குரீரே-ராமா-பலராமா

பலராமர் சொல் தரு.

யென்னாளும் உந்தனிட
யிடக்குகள் போரதில்லை-கிஷ்ணா-மாயகிருஷ்ணா



கிருஷ்ணமூர்த்திசொல-தரு.

சொன்னால் தெரியாதிப்போ
பின்னால் தெரியப்போகும்-ராமாபல

பலராமர்சொல்-தரு.

இந்தசன் னாசியின்மேல
யெவர்கள் பழுதுரைப்பார்-கிஷ்ணா மாயகிஷ்ணா

கிருஷ்ணமூர்த்தி சொல்-தரு

உந்தனுக்கறியச், சொன்னால்
உம்ப க்கதிக மென்றீர்-ராமா பலராமா

பலராமர்சொல் தரு.

யென்னடா கோபாலகிருஷ்ணா
யிப்படி மரிக்கலாமோ-கிஷ்ணா மாயகிஷ்ணா

கிருஷ்ணமூர்த்திசொல்-தரு.

யெண்ணிமே சுபத்திரைதன்னை
யிழந்துவிடுவீர் சொன்னேன்-ராமா-பலராமா

பலராமர்சொல்-தரு

போனாலும் போகுமிந்த
பெரியவர் பழிநமக்கேன்-கிஷ்ணா மாயகிஷ்ணா,

கிருஷ்ணமூர்த்திசொல-தரு.

ஆனால்யிவனால் வந்த
அவதிக்கு நானிருக்கேன்-ராமா-பலராமா

பலராமர்சொல்-கவி.

இருக்கேனென்றுசொல்லி யிடர்வழக்குரைத்தாய்கிஷ்ணா
வருத்தம்நீபடவும்வேண்டாம் வரும்பழிநானேகொளவேன்
நருமலர்புஷ்பஞ்சூடும் நங்கையென்தங்கைதன்னை
வருகவேபாரும்கிஷ்ணா மனமகிழ்ந்தழைப்பாய்தம்பி

பலராமர்சொல்-வசனம்

அகோவாருந்தம்பி கிருஷ்ணா யிந்தசன்னாசியாலே வரப்பட்ட துன்பத்தைநானே கைக்கொள்ளுகிறேன் நீசந்தேகப்படாமல் தங்கையாகிய சுபத்திரையம்மனை யழைப்பியும் தம்பி கிருஷ்ணா

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் சுபத்திரையம்மனானவள் தமையனாகிய பலராமரழைத்தாரென்று கிருஷ்ணமூர்த்திசொல்லக்கேட்டு தமையனைக்காணும்படி சுபத்திரையம்மன் சபைக்குவருகிற விதங்காண்க.



சுபத்திரை வருகிற கவி.

இந்திரளாகிசீதை ரதியருந்ததி இந்ராணி
சந்திரமதியாள்ரம்பை தமயந்திசத்யபாமா
அந்திரதேவர்ப்பெண்கள் அனைவர்க்குமழகில்மிக்க
சுந்திரமயில்போலொற்ற சுபத்திரைவருகின்றாளே

சுபத்திரைவருகிற-தரு.

வந்தாள்சுபத்ரைப்பெண்பாரீர்- ஓய்யாரமாக
வாறாள் சுபத்ரைப்பெண் பாரீர்

விளையாடும்கன்னிகையாள் மதன்ரதியைப்போலே
விளையாடியேமாது மெள்ளசபைக்குவாராள்-வந்தாள்

சிங்காரக்கொங்கைமீதில் செம்பொன்மணியுமாட
சங்கீதப்பெண்கள்பாட சரசமோகினிபோல-வந்தாள்



திகழுயெவருங்காண சிரித்துசிரித்துகொண்டு
சொகுசுமிஞ்சியேபேசி சுபத்திரைவருகிறாள்-வந்தாள்

முத்துகள்பவளமின்ன முகத்தில்திலர்தமின்ன
சித்திரப்பதுமைபோலே சேயிழைவருகிறாள்-வந்தாள்

பொது-கவி.

வந்தாள்சபையில்நின்று மங்கையாள்சுபத்ரைமாது
கந்தனுக்குகமையான கரியசோபாலர்தம்மை
சிந்தையில்மகிழ்வியாகசிருஷ்ண தமையன்மாரை
சுந்திரமயிலைப்போலே தொழுதுநின்றேதுசொல்வாள்

பொது-வசனம்.

இவ்விதமாக சுபத்திரையம்மன் சபையில் பூரணச்சந்திரன்போல் வீற்றிருக்கின்றதமயன்மார்களாகிய பலராமர் கிஷ்ணமூர்த்தி யிவர்களைக்கண்டு துதிசெய்கிற விதங்காண்க.

சுபத்திரைசொல்-தரு.

சரணம்சரணமையா தமையன்மாரே
சரணம்சரணமையா

சரணம்சரணமையா தாயும்தந்தையைப்போல
பரிவாய்வளர்த்தெடுத்த பலபத்ராமரே சரணம்

கொஞ்சவயதிலென்னை கொண்டாட்டிசீராட்டி யிப்போ
கிஞ்சுகப்போலேயென்னை கொஞ்சிவளர்த்தீரமா சரணம்

பாலும்பழமுந்தந்து பாராட்டிசீராட்டி
சிலமுடன்வளர்த்த தேசிகாஉந்தன்பாதம் சரணம்

சின்னவயதிலென்னை செல்வக்கிளியதுபோல
உன்னிதமாய்வளர்த்த உத்தமரேஉந்தன்பாதம் சரணம்

சுபத்திரைசொல்-வசனம்.

அகோ கேளுங்கள் யெனது தமையன்மார்களே தங்களுடைய திவ்ய திருவடிகமலங்களுக்கு அனேகவந்தனம் அடியாளையிக்சபைக்குவரவழைத்த சங்கதியின்னதென்று திருவுளம் பற்றி அருள்செய்யவேண்டும். தமையன் மார்களே,

பலராமர் சொல்-கவி.

நங்கையென்தங்கையான நல்லுடைப்பிறப்பேவாழி
தாங்குதன்குலத்துக்கண்ணே சுபத்திரையென்சொல்லைக்கேளாய்
யிங்குள்ளசன்னாசிக்கு யேவியவேலைசெய்ய
பொங்கும்புண்ணியமும்நல்ல புருஷனும்கிடைக்குமம்மா.

பலராமர் சொல்-வசனம்.

அகோவாருமம்மா சுபத்திராதேவந்ததேயாமாகில் சுகப்பெற்று வாழக்கடவது யெழுந்திரும் உன்னையழைப்பித்தகாரணம் யென்னவென்றால் நீயிந்தசன்னாசியிடத்தில் வாசமாகயிருந்து அவர்உன்னை யென்ன பணிவிடைவேலைகளைச்செய்யச்சொன்னாலும் மறுத்துப்பேசாமல் அவருக்குப்பணிவிடைவேலை செய்துவாருமம்மாதங்கையே.

சுபத்திரை சொல்-வசனம்.

ஆனால் மகாசந்தோஷமாச்சுது அப்படியேயிந்த சன்னாசியினுடைய வார்த்தைக்குகீழ்ப்படிந்து அவர் யென்ன வேலையிட்டபோதிலும் தடையன்றிநடத்திவருகிறேன் அண்ணாவே.

சுபத்திரைதீர்த்தமெடுக்கும் தரு.

| | |
|---|---|
| நதிதனில்சலந்திரட்ட | நாயகிசுபத்திரையும் |
| சலுதியாகதானெழுந்து | தங்கக்குடம்தானெடுத்தாள் |
| வதனம்தளதளென்ன | மார்பில்தாவடமாட |
| நதிகள்சனைகள்தேடி | நடந்தாள்சுபத்திரையும் |
| தங்கச்சரிகைசேலை | தாளிப்பதக்கமின்ன |
| கெங்கைக்கரையைநோக்கி | கிளிமொழிநடந்தனளே |
| அங்கமதில்புனுகு | ஆபரணங்களாட |
| மங்கையும்ஜலமெடுக்க | வந்துமேவினாள்-நதிதனில் |

பொது-கவி.

நதிதனில்தீர்த்தமாடிநாரணன்தங்கைதானும்
அதிவிதபூங்காவுக்கு அன்னம்போல்நடந்துயேகி
மதியுள்ளசன்னாசிக்கு வரிசையாய்பூசைக்கேற்ற
விதம்விதமானபுஷ்பம் வேண்டியதெடுக்கின்றாளே.



பொது-வசனம்.

இவ்விதமாக சுபத்திரையானவள் சன்னாசியினுடைய உத்தரப்படி தங்கக்குடங்கொண்டுநதிக்குச்சென்று தீர்த்தமாடி சலம் திரட்டிக்கொண்டு அங்கிருக்கும் நந்தவனத்தில்புகுந்து பூசைக்குபுஷ்பமெடுக்கிறவிதங்காண்க.

சுபத்திரை புஷ்பமெடுக்கும்-தரு.


| | |
|---|---|
| மல்லிகைமுல்லை மரிக்கொழுந்துங்கூட | பாங்கிமாரே |
| நல்லபுஷ்பம்தேடி நாமெடுப்போம்வாரீர் | பாங்கிமாரே |
| சன்னாசிபூசைக்கு தாழ்வொன்றும்வாராமல் | பாங்கிமாரே |
| வர்ண்ணமலரெடுத்து மாலைசரம்தொடுத்தேன் | பாங்கிமாரே |
| மந்தாரைசெண்பகம் செந்தாமரையுங்கூட | பாங்கிமாரே |
| சந்திரஆரம்போலே விந்தைசரம்தொடுத்தேன் | பாங்கிமாரே |
| வேளையாச்சுதென்று வீணாய்கோபிப்பாரே | பாங்கிமாரே |
| நாளையாகுமிப்போ நடந்துபோவோம்வாரீர் | பாங்கிமாரே |

பொது-கவி.

பூசைதனக்குள்ளதெல்லாம் கொண்டுவந்தேன்
பூசைவிதமுடிந்தபின்பு புதியநெய்பால்
போஜனமும்போசித்தருள்வீர் பசிபுத்திர
பொழுதுமினிபுகுந்துவனம் புரியும்வேளை
பேசெனவேபுலித்தோல்மேல் படுத்துகைகால்
பிடியெனவேயெதிர்குலத்தில் பிறந்தபெண்ணும்
வாசமலர்க்கைகளினால் மிகவுமேந்தி
மடியில்வைத்துமெள்ளமெள்ள வருட்டினாளே.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் சுபத்திரையம்மன் நதிக்குச்சென்று சலம்திரட்டி புஷ்பமுதலியதுங்கொண்டுவர சன்னாசியானவர் சிவபூசை அரிபூசைகளைமுடித்து போஜனமருந்தினபின் சூரியன் அஸ்தமானமாகி கந்துலடையசன்னாசியானவர் தான்வைத்திருந்தபுலித்தோலாசனத்தில் சயனித்துக்கொண்டு தன்னுடைய அஸ்தம் கைகால்முதலானதை பிடிக்கும்படி சுபத்திரையம்மனுக்கு கட்டளையிட சுபத்திரையம்மன் சன்யாசிக்கு தூக்கம்வரும்படி கைகால்பிடிக்கிற விதங்காண்க.



சுபத்திரை கைகால் பிடிக்கிற-தரு.

விமலர்க்குசரியான மெய்யன்சன்னாசியர்க்கு
கமலக்கரத்தினாலே கால்பிடிப்பேனே
அமலர்க்குசரியான அய்யன்சன்னாசியற்கு
கமலக்கரத்தினாலே கால்பிடிப்பேனே
அரிபூசைமறவாத அய்யன்சன்னாசியற்கு
கமலக்கரத்தினாலே கால்பிடிப்பேனே
அரிபூசைமறவாத அய்யன்சன்னாசியர்க்கு
பரிவயென்கரத்தினால் பாதந்தனைபிடிப்பேன்
கர்த்தன்திருவடியில் மெத்தமனம்வைத்தவற்கு
பக்தியுடனேபாதம் பூசைகள்செய்தேன்
மன்மதனை துரந்த மாயசன்னாசியற்கு
யென்கரம்வினைகள்போக்க கால்பிடிப்பேனே
மையல்விரகமென்னும் மாய்கைதனையொழித்த
அய்யன்சன்னாசியர்க்கு அடிபணிவேனே-விமலர்

சன்னாசிசொல் கவி.

வருடியப்பொழுதேகாமன் வளைத்துடல்துளைத்துக்கொல்ல
இருடியும்விரகமாகி யென்னதுமெண்ணியெண்ணி
அருகினிலிருந்தால்மோகம் அடங்குமோஅடங்காதென்று
பெருகியசுபத்ரைதன்னை போவென்றுஅனுப்பினாரே

சன்னாசிசொல்-வசனம்.

அகோவாரும்பெண்ணேசுபத்திராதேவந்து வெகுதேசகாலமாகின்றது உன்னுடைய யெதாஸ்த்தானம் போய்சேரும்சுபத்திரா.



சுபத்திரையின்விடுதிபோகும்-தரு.

சன்னாசியார்போமென்று சொன்னபின்பு
சமுத்துள்ளசுபத்ரையும் தாநடந்தாள்
பொன்னும்பணிகளெல்லாம் பளபளென்ன-நல்ல
பொற்கொடிசுபத்திரையும் தானடந்தாள்
கன்னியர்க்கவரிஆல வட்டம்வீசவே
காரிகைசுபத்திரையும் தானடந்தாள்
உன்னிதமானயிடை தளதளவென்ன
உயர்குலசுபத்திரையும் தானடந்தாள்
வாடைப்பரிமளங்கள் கெந்தம்வீச
மங்கையர்மங்களங்கள் பாடியாட
மேடையில்சுபத்திரைப்பெண் தானெழுந்து
மெல்லியருடனே அந்தப் புரம்நடந்தாள்-சன்னாசி

பொது-கவி.

நடந்தபினகிடந்தசன்னாசியாராசையாலே
மடந்தனையொழித்துபூங்கா வனந்தனிலுறங்கியேங்கி
தடந்தனி தர்க்காலத்தி சந்ரனைப்பார்த்துப்பார்த்து
உடனிருந்தவனும்வேளை உரங்கினான்கலங்கினானே.

பொது-வசனம்.

சுபத்ரையம்மன் யெதாஸ்தானம்சென்றபிறகு அர்ச்சுனராசன் சுபத்திரையின்பேரில் மையலாகி மடத்தைவிட்டு பூங்காவனம்போய் யேங்கியேங்கி நித்திரையில்லாமல் வெகுநேரம் சுபத்திரையின் மேல் யெண்ணங்கொண்டபடியே தூங்கியெழுந்திருந்து அர்ச்சுனன் சுபத்திரையை நினைந்து புலம்புகிற விதங்காண்க.

அர்ச்சுன சன்னாசி புலம்பல்-தரு.

யென்னசெய்வேன் நானென்னசெய்வேன்
யேதுசெய்வேன் விதிவசமே
அய்யய்யோநான் யென்னசெய்வேன்
ஆதிரங்க நாயகரே
அய்யய்யோமன்மதன் ஐந்துகணைபூட்டியே
ஆறுகியெந்தனுடல் நீறுநீறாகவே

சேராமலேநிரைய          யெய்யுரான்
மன்மதன்யெரியுரான்          அய்யய்யோ-யென்று
வாதுசெய்யும்          பாவிமன்மதன்
மாமலரின்கணை          யெய்யுரான்
மாதவனேகேசவனே          வைகுந்தவாசவனே
வடமலைப்பூண்டதிரு          வாசமணிமார்பேனே
யாதவனந்தனுஅரிகரி யெந்தன்மேல்யெரியுரானேஅய்யய்யோ-

மைவிழியாள்சுபத்திரையும்          வந்துயெந்தனருகிருந்தால்
தையலரைவிட்டுநானும          தனியாகநின்று
சதிரானமோகந்தீராமல          மெய்யல்லாம்நீராக
வெந்துதணலாகுரேன்          நானும்
வேகுரேன்நோகுரேன்          சாகுரேனேயய்யோ-யென்
வர்ணவானக்கோகிலமே          யென்மேல்
வாதுசெய்து          கூவுகிரான்
அன்னனடைவஞ்சிமயல்          ஆசையானேன்அவுதானமாக
சொர்ணமொழிவார்த்தையாளும் சேர்ந்தான்மனையில்முன்னே
வர்ணக்கோகிலமேயென்          வடிவுமரைந்திடும்-யென்று

அர்ச்சுனசன்னுசிசொல்-கவி.

அய்யய்யோமதனுவுந்தன் அருங்கணைமலரினாலே
யெய்யுரானெந்தன்மீதில்யிருந்தபெண்ணேகிவிட்டாள்
தையல்மேல்கணைதொடுத்துசதிருடன்வரவேசெய்வாய்
நையுரேன்விரகத்தாலேநானென்னசெய்வேனப்பா.

அர்ச்சுன சன்னுசி சொல்-வசனம்.

அய்யய்யோ தெய்வமே யென்னருகிலிருந்த சுபத்திரையைக் காணுமே மன்மதன்கணை மார்பில்பட்டுருகுதே யெனக்குவிட்ட மன்மதபாணத்தை அந்த சுபத்திரையின்மேல் தொடுத்து யென்னிடம் வரச்செய்யலாகாதா யென்னுடலம் நையுதே யென்னசெய்வேன்தெய்வமே.

அர்ச்சுனன் சொல் தரு.

யென்னசெய்வேன்          யென்னசெய்வேன்
யேதுசெய்வேன்          விதிவசமோ
மன்னுக்காம          விரகத்தாலே
வாசமல்ல          யிதுவாசமல்ல



கூசாமலேகால்பிடித்தாள்நல்லகுணத்துடனேவார்த்தைசொன்னான்
ஆசையாய்மிகவுமானாள்          அரியாதுபோலேபோனாள்
உறக்கமினிவாராது          ஒருவராலாகாது
பொருக்கதிடமுமில்லை          பொழுதுவிடியவில்லை
சுபத்திரையென்னும்பெண்ணாள்          தரியோதனர்க்காகினாளோ
வியர்த்தசன்னுசியாக          வேஷமும்நானானேனேயோ-யென்

அர்ச்சுனன் சொல் வெண்பா.

நித்திரையும்கெட்டு நினைவுதடுமாருதே
சத்துருவாய்காமரசம் தைக்குதே-மைத்தொருபெண்
அருகிருந்துவுரவாடி.

அர்ச்சுனன் சொல் தரு.

யென்னாசையைத்தீர்க்க          யார்வருவாரோ
குயிலினங்காள்          அழைத்துவாரீரோ
மயிலாளேயென்னை          மருவியிப்போது
ஒயிலானபெண்ணே          உகந்தெதிர்வருவாயிப்போ-சுரு
கணைத்திடுமுன்னே          மனமொத்துதவிசெய்ய-யென்னு

அர்ச்சுனன் சொல் வெண்பா.

ஊழிப்பலர்கூடி ஒருருவமாகி
கோழியின்வாய்மணம் கூறுகொண்டு-தோழியரும்
சிந்தைமகிழ்ந்துவர.

அர்ச்சுனன் சொல் தரு.

செய்குவாய்மதனு          யெந்தனைவிட்டு
ஸ்ரீஅரிசுதனு
கிளிமொழியைச்சேர          யெய்யுதேமதனு
உந்தன்னேர்விழி          சத்துருநிமையாமல்
தத்திவிழுகிராய்          மெத்தவருந்துதே-சுரு
மயில்சுபத்திரைதன்னை          வரச்செய்குவாய்மதனு-செய்

அர்ச்சுனன் சொல் கவி

இப்படிசன்னுசியிரவெல்லாம் விரகத்தாலே
வெப்பினிலுழல்வார்போலே வெதும்பியங்கிருந்துவிட்டார்

செப்பிளக்கொங்கையான தேன்மொழிவிரகமாகி
துப்புராலுருகுமேனி சுபத்திரைவருகின்றாளே.

பொது-வசனம்.

இப்படி அர்ச்சுனசன்னாசி அன்றிரவெல்லாம் மன்மதன் விகாரத்தினால் வெதும்பிமதிமயங்கி சுபத்திரையின்பேரில் மயலாகியிருக்கும்போது சுபத்திரையம்மன் மையல்மீறிதாதிகளைப்பார்த்துசொல்லுகிறவிதங்காண்க.

சுபத்திரைபுலம்பல்-தரு.

யென்னசெய்குவே யிப்போயேதுசெய்குவேன்-தெய்வமே.
பூதலந்தன்னிலுள்ள மாதாகள்தன்னைப்போலே
புருஷபாக்கிய மில்லையோ
விரகலாகிரி பருவமானால்
விரசம்பொருந் திடலாமோ
சரசமாய்விளையாட சர்க்குணனோடான் கூட
தாவியமாலையும் காணேன்
பரிவுடன்மாலையிட துரியோதினன்வருவான்
யிச்சமயம்அர்ச்சுனன்மேல் மையலானேன்
யிளமைபொல்லாப்போ அளவில்லாமல்
பழுதாகப்போகுதே தெய்வமே
களபகஸ்தூரிபூசாமல் கன்னியின்றழுவனோ

சுபத்திரை சொல்-வெண்பா.

அரவமுழுங்கிட்டதோ அச்சாணிஅற்றதோ
புரவிக்குஅம்புரிகிபோச்சுதோ-பிரவிதான்
விதியின்பயத்தினால்

சுபத்திரை சொல்-தரு.

செத்தானோபாகி சூரியதின்னம்
தேர்விடக்காணோமே அம்மணி
பர்க்குணரைஒருகொடியில் பார்த்துஅழைத்துவந்தால்
மிக்கசந்தோஷிக்க வேணபூஷணம்தாரேன்-செத்தா

சுபத்திரை சொல்-வெண்பா.

போதுவெடியாதோ புண்டரீகம்பூக்காதோ
மாதேயென்மனத்துயரம் மாறாதோ-ஆதாவாய்
காண்டீபனைக்கண்டு.



சுபத்திரை சொல் தரு.

விஜயனோடான்கொள்ளு வேனோ
விரகந்தீரக்கொள்ளு வேனோ
மதனலீலஞ்சக்கரை தேனோ
யெந்தனைசேர வாரானோ
வாரானோயென்பிராணநாதன் யினியென்னசெய்வேன
தாரார்புகழ்படைத்த தர்மர்க்கிளையகோவே-விசை

சுபத்திரை சொல் வெண்பா.

மாரன்கணையதினால் மயிர்கூச்சிக்கொள்ளுதே
கூரியவாள்கொண்டென்னை குத்துதே-போயின்று
மகாராஜன்பார்த்தநிட மலரடியைநான்காண
உபகாரம்செய்வாய்-உண்மை.

இதுவும் வெண்பா.

சன்னாசிவேஷமாய் தாணியுள்ளோர் தாமறிய
பெண்ணாசையாலே புறப்பட்டார்-சன்னாசி
தபத்தையறியேனோ சாஸ்திரத்தில்தப்பாமல்
சுபத்திரையைக் கொள்ளவந்த-சூது.

சுபத்திரை சொல் தரு.

தினஞ்சுகமாகவே போகமதனலீலன்
செய்வானோ செய்வானோ
மனஞ்சலிப்பாகவே தனஞ்சயபூபதி
வாரானோ வாரானோ
யிங்குள்ளமோகமும் தாகமும்சோகமும்
யெப்படிநான் சொல்லுவேன்
சங்கதியறியாத தாயும்தகப்பனும்
சத்துரு வானாரே
அன்னையும்தந்தையும் முன்னறிதெய்வமென்று
அவ்வையுரைத்தனளே
தன்னுளம்யென்னிட தாயும்தகப்பனும்
சத்ராதியானாரே
யிச்சையில்லாதுரி யோதினன்கொண்டுபோக
யெப்படிநான்பொறுப்பேன்

வெத்திவிஜயனும் அர்ச்சுனபூபதி
வாராரோ வாராரோ

சுபத்திரை சொல் வெண்பா.

இருக்கும்சிசுபாலன் யிச்சையுள்ளகிருஷ்ணனையும்
பெருக்கமுடன்கைபிடிக்தப் பெண்ணாரும்- ருக்மணியின்
கன்றுவெடிதப்பொழுதே கடிகிரீயென்முன்வர
பொன்மணமுமின்றுவெடிந்தாக்கால்.

சுபத்திரை சொல் தரு.

மனதில்விசையகான மைத்துனன்மேலிச்சையானேன்
அனுகூலமாகவேணும் ஆதிநாராயணமூர்த்தி
யிச்சையானவர்மேலெல்லாம் யின்பமாயருள் தருவீரே
அச்சுதானந்தகோவிந்தா ஆதிநாராயணமூர்த்தி

சுபத்திரை சொல் கவி

ஆதிநாராயணாவென்றழுதமே சுபத்ரைதானும்
பாதிராவேளைதன்னில பஞ்சணைமீதிலதுஞ்ச
யேதுமாமறைசன்னாசி யிரவெலாமனதுநோக
வேதியர்தொழுதுபோற்ற வெடிந்ததுபொழுதுதானே.

சுபத்திரைசொல்-வசனம்.

அகோ வாருங்கள்பாங்கி மார்களே பொழுதுவிடிந்து நித்திரைதெளிந்து விட்டதாரம் சன்னாசியினுடைய பணிவிடவேலைக்கு போவோம் வாருங்கள் தோழிமார்களே.

சுபத்திரைசொல்-தரு.

தோராதசுபத்திரைப்பெண் ஸ்ரீமன்நாராயணாவென்று
கோரகதியைநோக்கி நடந்தனளே
அருணோதயவேளைதன்னில் யெழுந்தோடி- நல்ல
கருணையுள்ள துவாரகையில் தீர்த்தமாடி.
பொனமணிபணியணிகள் முத்துசூடி
பூவையர்களிருபுரம் யிசைபாடி-தோராத
கஸ்தூரிநாமமிட்டு வாடைபூசிநல்ல
கன்னியாழகினில் பேசிபேசி



விஸ்தாரமானவளைக் கையைவீசிநல்ல
மேலானபெண்களுடன் வந்துபேசி-தோராத

சுபத்திரை சொல் வெண்பா.

ஐயாசருணம் அருமறையோகிச்சருணம்
மெய்யாசருணம் விடமேசருணம்-மையாலுருப்
பெண்ணாசையாலே பொருள்தேடிவீற்றிருக்கும்
சன்னாசியாரே சருணம்.

அர்ச்சுனன் சொல் வெண்பா.

கொங்கைக்கனத்ததோ கொடியிடைதான்ஞொந்ததோ
செங்கமலர்ப்பாதம் ரெண்டும்சிவந்ததோ-மங்கைநல்லீர்
மைப்பொழுதோமானே மயிலனையாயென்முன்
யெப்போது வந்தாயிரு.



சுபத்திரை சொல் கவி.

இருந்திடுமென்றுசொன்ன யென்குருநாதாநீர்தான்
பொருந்தியதேசமெங்கே புண்ணியதீர்த்தங்களேது
அருந்தபமுயர்ச்சிபெற்ற அய்யனேதயவுசெய்து
வருந்திநின்றடியாளுக்கு வகையாஉரைத்திடீரே.

சுபத்திரை சொல்-வசனம்.

அகோ சருணம் சருணமையா சன்னாசியாரே உம்மைப்பார்த்தால் சன்னாசியாகத்தோன்றவில்லை ஆகையால் தங்களுடைய பட்

டணம் யெது உம்முடைய நாமதேய மென்ன சொல்லவேண்டுமை யா சுவாமி.

சன்னாசி சொல் தரு.

இந்திராபுரிதன்னில் வாசமாயிருந்திடும்
யென்பேர்விஜைய ரிஷிதான்
யிந்தஉலகமெங்கும் யேகிநான்தீர்த்தமாடி
சிந்தைமகிழ்ந்துபுண்ய ஸ்தலங்கள்திரிந்துவந்தேன் -யிந்தி

சுபத்திரை சொல் தரு.

அந்தபட்டணமாளும் ஐவர்பஞ்சவர்கள்
அவரும்சுபேக்ஷம தானா
விந்தைதருமர்வீமர் நகுலர்சகாதேவர்
சிந்தைமகிக்ஷியாய் சுகமாயிருக்குராரா- அந்

சன்னாசி சொல்தரு

நாலுபேர்தன்னையுரைத்தாய் அர்ச்சுனன்பேரை
நாடிக்கேளாமல் மறந்தாய்
யேனோயிதுவரைக்கும் யிகக்ஷிசெய்தாயென்னை
வானவர்கோன்மைந்தனை மறந்துவிடுவதென்னா-னா

சுபத்திரை சொல் தரு.

அவரேயெனக்குநாயகன் ஆதிமுதலாய்
ஆசையினன்பாய் மெலிந்தேன்
நவநீதனாரெனக்கு நாயகனென்றுசொல்லி
அவர்திருநாமம்சொல்ல அஞ்சிப்பயந்தேநின்று-அவரே

சுபத்திரை சொல் கவி.

ஐந்துநான்வயதாளாய் அவன்நான்புருஷனென்று
சந்திரசூரியர்கள்தேவர் சாக்ஷியாயிருக்கின்றேன்யான்
யிந்திரன்மகனேயல்லால் யினியெவர்வேறேயுண்டோ
யெந்தனைக்கூடிருக்கும் யின்பமேதருகுவீரே

சுபத்திரை சொல் வசனம்.

அகோ கேளுமையாசுவாமி சன்னாசியே ஐவராஜாக்களில் நடு வோராகிய அர்ச்சுனமகாராஜன் யெனக்குப்புருஷனென்றும் யான் அவருக்குபாரியாளென்றும் யென்சிந்தையில் நினைத்திருக்கின்றே-



ன் அவருடையநாமதேயம் சொல்லப்பயந்தேன் ஆகையால் உனது நாமதேயம் விஜயரிஷியென்றும் நீர்சொன்னபடியால் அவர்நீரேயொ ழிய வேறில்லை யெனக்கிருக்கும் மன்மதவிகாரத்தைத்தீர்த்து ரக்ஷி க்கவேணும் சுவாமி சன்னாசியே.

சன்னாசி சொல்-கவி

பாதகிசண்டாளியிந்தப் பழிதனையென்மேல்வைத்து
ஆதியாய்பிழைக்கவந்த ஏழுமைதனைக்கெடுக்கவந்தாய்
யேதடிபெண்ணே நான் ரிஷியென்றுமறிந்திருந்தும்
மாதருக்கரசேயிந்தமடிமாங்காய்போடலாமோ.

சன்னாசி சொல்-வசனம்.

அகோவாரும் பெண்ணே சுபத்திராவிஜயரிஷியென்னும் நாம தேயம் அர்ச்சுனனுக்கேயொழிய மருபடியாருக்குமில்லையோ நீ யி ந்தமடிமாங்காயான வார்த்தைகளை சொல்லலாமோ நான் காலமெ ல்லாம் போசித்திருக்கும் அன்னத்துக்கு வின்னம் செய்யவந்தா யோபடுபாவி.

சுபத்திரை சொல்-தரு.

காமவிகாரத்தாலே களைதாங்கியுருகுரேன்
யேமாத்தவந்தீரோ மைத்துனரே

அர்ச்சுனன் சொல்-தரு

மைத்துனரென்றுயென்னை மனதினில்யெண்ணங்கொண்டாய்
அச்சமில்லாமல்வார்த்தை அன்பாயுரைக்கவந்தாய்

சுபத்திரை சொல்-தரு.

அச்சங்களெனக்கென்ன மைத்துனரேபோம்போம்
பக்ஷமுமாகிவந்தேன் மைத்துனரே

அர்ச்சுனன் சொல்-தரு.

பக்ஷமுமானேனென்று பதிவசனம்சொன்னாய்
கிஷ்ணரறியாமலுன்னை சேரேனே

சுபத்திரை சொல்-தரு.

என்னைச்சேரேனென்று உரைத்தாய்மதனலீலா
உன்னால்வில்வளைத்து யெய்யிரானே

அர்ச்சுனன் சொல்-தரு.

பெய்யுரையெனென்றுசொல்லி யென்னைமயக்கவந்தாய்
யென்னையுமுன்னை நான்தொடேனே

சுபத்திரை சொல்-தரு.

தொட்டாலுனக்குபயம் யென்னுவிஜயபூபா
அட்டியில்லாமல்சேரும் மைத்துனரே

அர்ச்சுனன் சொல்-தரு.

அட்டியில்லாமலுன்னை அணைத்தால்பலபத்ராசர்
வெட்டியெறிந்திடுவார் சுபத்திரையே

சுபத்திரை சொல்-தரு.

வெட்டியெறிவாரென்று வீணைவார்த்தைசொன்னாய்
பட்டமுனக்களிப்பார் யென்பிராணநாதா

அர்ச்சுனன் சொல்-தரு.

பட்டம்தரிப்பாரென்று பாங்கானவார்த்தைசொன்னாய்
தூட்டாரம்செய்யாரடி சுபத்திரையே

சுபத்திரை சொல்-தரு.

தூட்டாரம்செய்யாதென்று ஒழிங்கினாலுமுந்தன்
கிட்டவந்துன்னைசேருவேன் யென்பிராணநாதா

அர்ச்சுனன் சொல்-தரு.

சேருவேனென்றமொழி தேனையுரைத்தாயிப்போ
காரியமில்லையோடி சுபத்திரையே

சுபத்திரை சொல்-தரு.

காரியமல்லவென்று சுசக்கிமுகந்தால்மணம்
நேருமோநோரதையா பிராணநாதா

அர்ச்சுனன் சொல்-தரு.

மதனுமதனுவென்று மனதுமகிழ்ந்துரைத்தாயிப்போ
பதமாகதூகட்டும்போ சுபத்திரையே

சுபத்திரை சொல்-தரு.

ஆகட்டுமென்னவென்று ஆசீசமெனக்கென்ன
சோகமுமானேனையா பிராணநாதா



அர்ச்சுனசன்னாசி சொல்-கவி.

சோகமுமானேனென்ற தோகையேசொல்லக்கேளாய்
மோகமேதீர்ப்பதற்கு முடிந்திடாதினியென்செய்வேன்
வாகுசேர்துரியராஜன் வந்துன்னைமணமும்செய்வான்
யேகுமுன்னகத்தைநோக்கி யினியிங்கேநிற்கொணாதே.

அர்ச்சுனசன்னாசி சொல்-வசனம்.

கேளும் பெண்ணே சுபத்திரா நீ யென்னை சேரவேண்டுமென்று மோகம் கொண்டிருக்குராய் யிப்போது உன்மோகத்தை தீர்ப்பதற்கு யென்னாலாகாது துரியராஜன்வந்து உன்னைகலியாணம் செய்து உனக்குண்டாகிய மோகத்தைதீர்ப்பான் யென் முன்னே னின்று வீண்வசனங்களை உரைக்கவேண்டாம் சீக்கிரமாக உன்னுடைய அரண்மனைப்போய் சேரும் சுபத்திரா.

சுபத்திரை சொல்-தரு.

மோகமுமானேனையோ தபசியரே
மோகமுமானேனையோ
மோகமீறியெந்தன் முடிமெத்தசோருதே
ஆகமும்மனதுவொன்றாய் அண்டிருக்கலாமிப்போ-மோகமா

சன்னாசி சொல்-தரு.

பாபத்தை சொல்லாதேடி தபசியோடே
பாபத்தைசொல்லாதேடி
பாபமிந்தவார்த்தை பகராதேபெண்ணேடே
சோகந்தீரவென்றால் துரியன்வருவானிப்போ-பா

சுபத்திரை சொல்-தரு

வித்தைகளேன்பேசுரீர் தபசியாரே
வித்தைகளேன்பேசுரீர்
வித்தையிதுமெத்த விக்கிரமனென்று
உத்தமரேயிந்த உலகெங்கும்சொல்வார்கள்-வித்தை

அர்ச்சுனன் சொல்-தரு.

அரகராசங்கரனே யிப்படிக்கொற்ற
அன்னீதம்சொல்லாதேடி

பரிதேசிகமக்கிர்த பரியாசம்தெரியாது
சரியல்லஉனக்கிது தர்ம்மமல்லவேபோடி-அரகரா

சுபத்திரை சொல்-தரு.

பேவென்றுநீமரித்தாய் யிதுநான்செய்து
பெல்லாதபாதகமோ
சோகத்தினால்மெத்த சோங்கித்தவிக்குரேன்
மாய்கையைநீர்விட்டு வாரும்வாரும்சுவாமி-பேவெ

அர்ச்சுனன் சொல்-தரு.

வந்துன்னைநான்கலந்தால் வெகுமோசம்
வருகுமடிபெண்மயிலே
யிந்தசரசங்கள் யெந்தனுக்காகாது
யெத்தனைபேரைநீ யிப்படிசெய்தாயோ-வந்து

அர்ச்சுனசன்னாசி-வசனம்.

அகோவாரும் பெண்ணே சுபத்திராநான்மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையிக்கமூன்று ஆசையும் துலைத்து சன்னாசியென்று தெரிந்திருக்கும் உன்மதிதுலைத்து யிப்படி பேசலாகுமாயினி மேலிந்த பாபமானவார்த்தைகளைச் சொல்லவேண்டாம் உன்மனைக்குப் போய்வாரும் பெண்ணேசுபத்திரா.

சுபத்திரை சொல்-தரு.

யிப்படிநீர்சொல்லலாமோ சுவாமி
பெரிதல்லோபெண்பாபம்போமோ
சற்பனைசெய்யாதீர் தயவாயென்மீதினில்
அர்ப்பம்சொற்பமல்ல அருமைதபசியரே-யிப்படி

அர்ச்சுனன் சொல்-தரு.

மய்யல்கொண்டேனென்று சுபத்திராயிது
மரியாதையில்லாமல் பேசுராய்
அய்யோயினிமேலுந்தன் அரண்மனையைவிட்டு
உய்யவாராதடி ஒதிங்கிப்போரேன்பெண்ணே-மய்ய



சுபத்திரை சொல்-தரு.

போனால்விடுவேனா சுவாமி
பொற்கொடியாள்மெத்தகாமி
நானேஉடன்பட்டால் நாணயமுனக்கென்னா
நாகரீகம்பேசி வீணாளையும்போக்காதீர்-போனா

அர்ச்சுனன் சொல்-தரு.

வீண்வார்த்தைசொல்லுவதேனோ சிவ
சங்கார்க்கர்ப்புதமாயோ
வீணானவீண்பழி தேடிக்கொள்ளாதேநீ
வெகுமோசக்காரினீ யினியிங்கேநில்லாதே-வீண்வா

சுபத்திரை சொல்-தரு.

வேஷத்துக்கெதிர்வேஷம் கொள்ளுறாயென்னை
முழுமனம்சோதிக்க யெண்ணுறாய்
ஆசையினாலிக்க ஆண்டிவேஷங்கொண்டு
அர்ச்சுனராஜனென் றசியேனோநாகிப்போ-வேஷம்

அர்ச்சுனன் சொல்-தரு.

மனமுன்னைசெய்வது நீதியோவடி
மங்கையேநானுந்தன் ஜாதியோ
யினியொன்றும்வார்த்தைகள் யென்னோடேபேசாதே
யேகாங்கிசன்னாசியை யேளிதம்செய்யாதே-மனமுன்

சுபத்திரை சொல்-தரு.

யேளிதம்நீரென்னைசெய்குறீர் யிப்போ
யென்னைசோதித்துநீர் பார்க்குறீர்
நானுந்தன்வலையினில் அகப்பட்டுழல்கிறேன்
ரஞ்சிதம்போலவே கொஞ்சியேநீர்வாரும்-யேளித

அர்ச்சுனன் சொல்-தரு.

மதிகெட்டுப்போச்சுதோசுபத்திரா யென்னை
மருகவேணுமென்று பசப்புறாய்
பலபேரறியயென்னை பங்கமிகவேசெய்து
அருமைதரியனுக்கு மனைவியாய்போனபின்-மதிகெ

சுபத்திரை சொல்-கவி.

மதியகுலத்தேவும்மை மருகவேங்கினவுகொண்டு
விதியிடவாருதன்னை வெல்லவொண்ணாதுஅய்யோ
அதிவிதமானயென்னை ஆள்வதுங்யேயல்லால்
மதியிலாதுரியன்வார்த்தை மகிழ்ந்துமேகடவாதையா.

சுபத்திரை சொல்-வசனம்.

அகோவாருமையா சன்னாசியாரே யென்னை துரியோதனனுக்கென்று சொல்லுகிறீர் யிந்தவார்த்தையானது கினவிலும் நடவாது யென்னுடையஆசையைத்தீர்த்து ரக்ஷியுமய்யாசுவாமி காண்டபரே.

அர்ச்சுனன்சொல். தரு

உன்மீதுலாவேப்படி　　காஷாமைசன்னாசியடி
யென்மீதிலாசைகொண்டால்　　உன்னையிப்போ
பேசாரோ　　வையகத்தில்
உனக்கேற்றபுருஷனடி.　　அந்த
உன்விதமுள்ள　　துரியோதனன்
வையகமிகழாதோ　　உன்னைப்போல
மங்கயர்　　பேசாரோ
தையலுன்கோத்திரத்தார்　　உன்னை
சஞ்சலம்　　சொல்லாரோ
தொண்ணூத்தாரு　　பத்துமேசென்ற
துவண்டகிழவனடி　　யிந்த
விண்ணானவார்த்தையெல்லாம் விளங்காதேபெண்மயிலே

அர்ச்சுனன் சொல் வசனம்.

அகோ வாரும்பெண்ணே சுபத்திரா யிந்த பூலோகமெல்லாம் யேகச்சக்ராதிபதியாக ஓர் குடையிலாளப்பட்ட துரியோதன மகாராஜன் உனக்கு கணவனாகயிருக்க நான் வீடுவாசல் ஒன்று மில்லாத யேகாங்கியான சன்னாசியாக யிருக்கப்பட்ட யென்பேரில் அபேக்ஷைகொண்டால் உன்னைப்போலொத்த ஸ்ரீமார்களெல்லாம் உன்னைப்பார்த்து நகைக்கமாட்டார்களா நீ அந்த ஆசையைவிட்டு அரண்மனைக்குப்போயவாரும் சுபத்திரா,





சுபத்திரைக்கும்—அர்ச்சுனனுக்கும் தர்க்கம்.

சுபத்திரை சொல் தரு.

வேதனையாகுதே　　சுவாமியெந்தன்
வெரிதீரக்　　கண்பாருமே

அர்ச்சுனன் சொல் தரு.

மாதவமாதுனியாச்சே　　யென்னை
மரிவிதின்றுனக்　　கேச்சே

சுபத்திரை சொல் தரு.

கோமானென்றுனை　　யரியேனோ
யென்னகுறைசெய்து　　பெண்பிறந்தேனோ

அர்ச்சுனன் சொல் தரு.

சக்கட்டம்பேசுராய்மாதே　　யெந்தன்
சாவுகாசந்தெரி　　யாதே

சுபத்திரை சொல் தரு.

கனத்தநிலைகைகற்றயோகியே　　யிப்போ
கண்பாருமேயுர　　வாகியே

அர்ச்சுனன் சொல் தரு.

உரவாடிகால்வேகுமோசமே　　உந்தன்
அண்ணனால்யென்னுயிர்　　நாசமே

சுபத்திரை சொல்-தரு.

யெவருமெதிர்த்தாலும்வெல்வீரே சுவாமி
நீயெங்கேகற்றுயிந்த கல்வியே

அர்ச்சுனன் சொல்-தரு.

நீயுனக்கிணையல்லவே வெகு
நிஷ்டூரவார்த்தைகள் சொல்லலை

சுபத்திரை சொல்-தரு.

உன்னுணைசொல்றேன் சுவாமிநான்
உயிர்விடுவேன்மெத்த காமி

அர்ச்சுனன் சொல்-தரு.

உன்னுயிர்விட்டால் யெனக்கென்னசேதமோ
உனக்கும்யெனக்குமென்ன மர்மமோ

அர்ச்சுனன் சொல்-கவி.

யித்தனைவிரகத்தாலே யென்னைநீசேர்வாயென்று
சற்றுமேசகிக்கானும் தபசியெனலாகாது
சித்தினியாளேயுன்னை சேருவான்சூரியராஜன்
மெத்தவேகுலுக்கவேண்டாம் மெலவிநீயேகிடாயே

அர்ச்சுனன் சொல்-வசனம்.

கேளும் பெண்ணே சுபத்திராநீ யென்ன லீலாவினோதங்களைச்செய்தாலும் உன்மனதின்படி ஒருபோதும் நடவாது போடிபோடிபெண்ணே சுபத்திரா.

சுபத்திரை சொல்-தரு.

யென்னசெய்வேன்மைத்துனரே யிதங்காதோயென்னளவும்
அன்னவாகனத்தோரான அய்யனேபொருப்பனேதான்
ஒருத்தியாய்நான்பெண்பிறந்து உருகுறேன்மதனாலே
மருந்துயென்னைநீரும்சேர்ந்தால் மனமதுகுளிர்ந்துவிடும்
மைத்துனராநீரிருந்தும் மாய்கைவேஷம்கொள்ளலாமோ
சுத்தம்வைத்துயெந்தனைநீர் சேர்ந்திருக்கலாகாதோசொல்
தேவரீரிடத்திலவன் சேரவென்னநீதியோதான்
பாபமோவிதிவசமோ பிராணநாதாயென்னசெய்வேன்



148028

சுபத்திரை சொல் வசனம்.

அதோ வாரும் மைத்துனரே நானைந்துவயதுமுதல்கொண்டு யின்றுள்வரைக்கும் உமக்கே பாரியாளென்று நினைத்தேனேயல்லாமல் வேறில்லை தேவரீர் தயவுசெய்து யென்னுடன்சேர்ந்து ரக்ஷிக்கவேணும் மைத்துனரே.

அர்ச்சுனன் சொல் தரு

யென்னடிபெண்ணே நீ சொன்னதும்கேழ்க்கயில்லை-மானே-அடி-ம

சுபத்திரை சொல தரு.

மன்னனேவாவென்று வாய்மொழிதாரீரோ-சுவாமிநாதா

அர்ச்சுனன் சொல் தரு.

வாய்மொழிகூறினால் வந்திடுமோக்ஷம்-மானே-அடி-மானே

சுபத்திரை சொல் தரு.

காமன்விடுங்கணைக்கு கயிலாயமீடல்ல-சுவாமிநாதா

அர்ச்சுனன் சொல் தரு.

அவசரத்தாலுந்தன் அறிவுமழுந்ததோ-மானே-அடி-மானே

சுபத்திரை சொல் தரு.

யென்னால்முடியாது யினியென்னசெய்குவேன்-சுவாமிநாதா

அர்ச்சுனன் சொல் தரு.

அன்னாயன்விதிதப்புமோ சொல்வாய-மானே- அடி-மானே

சுபத்திரை சொல் தரு.

விதியென்னசெய்யு மிவ்வேளைப்பருவகாலம்-சுவாமிநாதா

அர்ச்சுனன் சொல் தரு

வெட்கமுமானமும் விக்குத்தவிக்குறாய்-மானே-அடி-மானே

சுபத்திரை சொல் தரு.

அக்கரையானபின் ஆகட்டுமென்குரீர-சுவாமிநாதா

அர்ச்சுனசன்னாசி சொல் வசனம்.

கேளும்பெண்ணே சுபத்திரா நீயென்னை வெகுசாமார்த்தியவானென்று நினைக்கவேண்டாம் நான் முஷ்டியெடுத்து ஜீவித்துவருகிற பிராமண சன்னாசியடி சுபத்திரா.

சுபத்திரை சொல் விருத்தம்.

வாளிதொட்டவிற்றழும்பும்வில்லும்வாங்கும்
வண்ணகைத்தழும்பும்தனத்தழும்பும்கிரைத்தழும்பும்
தோளிலிட்டதனிக்கட்டும்தழும்புமாரன்
சந்திரமும்குளிர்நடையும்துளிர்நிலாவும்
ஆணிலுமின்னழகுடன்பின்னழகும்பார்க்க
அவயவங்களர்ச்சுனரும்நீரேயாகும்
நீருமரையோகியரேநின்யால்கண்டேன்
நிஷயமாயெந்தனுக்குநிகழ்த்துவீரே.

சுபத்திரை சொல்-வசனம்.

கேளுமையா சுவாமிதங்களுடைய அஸ்தத்திலும்தோளிலு ம் வித்தழும்பாயிருக்கின்றது குளிர்ந்த சந்திரவிம்பத்தைப் போ லுமிருக்கின்றதைப்பார்த்தால் அர்ச்சுனமகாராஜன் நீரே யல்லாம ல் வேறில்லையாகையால் உன்னுடைய் உண்மைதனையின்ன தென்று வெளியிட்டுச் சொல்லவேணுமையா சுவாமி.

அர்ச்சுனசன்னாசி சொல்-விருத்தம்.

நிகழ்த்துமென்றசுபத்திரையே சொல்லக்கேளாய்
நீநினைத்தருதொருவர்நினைக்கமாட்டார்
புகழ்த்திருவேஜெகமகிழ் துரியன்சேட்டந்த
புரத்தில்வந்தால் உனைக்காணபோகாதன்றோ
மிகத்தனிமியதுவாரகையில் வசுதேவர்காண
மச்சினியுன்யிச்சையினால் மகிழ்ந்துபார்க்க
அச்சமற்றுசன்னாசியாகவந்தேன
அர்ச்சுனனென்றுன்மனதிலறிகுவாயே.

அர்ச்சுனன் சொல்-வசனம்

கேளும் பெண்ணே சுபத்திராநீ யென்னுடைய சவிஸ்த்தாரங்க ளை கேழ்க்கிறபடியால் நீநினைத்தருது மார்க்கம் ஒருவரும் நினைக்க மாட்டார் துரியோதனனுக்கு உன்னைவிவாகம் செய்யும்படி கேட் டவிபரம் தெரிந்து நானுன்னை விவாகம் செய்துக் கொள்ளும்படியி க்தசன்னாசிரூபமெடுத்து வந்தேன் ஆகிலும் துரியோதிரன் உன்னைக லியாணம் செய்துப் போய்விட்டால உன்னைநான் யெப்போது கா ணப்போறேன் நான்தான் அர்ச்சுனமகாராஜன்பெண்ணேசுபுத்திரா.



சுபத்திரை சொல்-விருத்தம்.

அர்ச்சுனனென்னும்பின்புநிலைகாணுயல்
அமைந்தவர்மேல் ஐந்துகணையடைந்தாற்போல
பச்சையிளம்ஸ்தனம்குலுங்க நடிக்கநிதிரேகை
பரபரக்காலசமயம் பதறியோடி
மச்சினரேசுகமோவென் றவர்மேல்வீழ்ந்து
மார்போடியாருருக மலைக்கைப்பூட்டி
பிச்செனவேபிடித்துகட்டி அரைநாதம்கவி
பெருமூச்சிவிட்டெரிந்துபேசினாளே.

சுபத்திரை சொல்-வசனம.

சுபத்திரையம்மாளவள் அர்ச்சுனமகாராஜனென்ற உண்மை யைச் சொன்னமாத்திரத்தில் சுபத்திரையானவள் அர்ச்சுனன்பேரில் வீழ்ந்து மார்போடணைத்து முத்தமிட்டு அர்ச்சுனமகாராஜன் முகத் தைப்பார்த்து சுபத்திரையம்மன் அதிகசந்தோஷத்தோடு யிருக்கிற பொழுது அர்ச்சுனமகாராஜன் சுபத்திரையைப் பார்த்து சொல்லுகி றவிதங்காண்க.

அர்ச்சுனன் சொல்-விருத்தம்.

இன்றிருந்த தினமுனக்கு நலமென்றாய்
யெந்தனுக்குமப்படியே யிருந்ததுகண்டாய்
முன்னிருந்தகிருஷ்ணர்பலராமவசு
தேவர்முதலோரெல்லாமொன்றாய்க்கூடி
அன்றிருந்துசொற்பொருத்தம்நிமித்தியமார்த்து
அரியதுரியோதனர்க்கென்றமைந்ததன்றோ
என்றிருந்துநினைமனது பொறிந்துவந்தால்
காயமோயிதுவுலகில்ந்யாயமாமோ.

அர்ச்சுனன் சொல்-வசனம்.

கேளும் பெண்ணே சுபத்திராதேவியென்மீதில் உனக்கெப்படிப்பிரி யமிருந்ததோ அதுபோல் யெனக்கு உன்மீதில் அதிகப்பிரியந்தான் உ ன்தமயன்பலராமர் துரியோதனனுக்கு உன்னைகொடுப்பதாக பொ ருத்தமிட்டியம்பார்த்து துரியோதனனுக்கு கொடுப்பதாய் சம்மதி த்து யிருந்ததாகவும் கேழ்விபாகிவந்தேன் நமதுயிருவருக்கும் யிரு

க்கிர இஷ்டர்கைப்போல் உனதகப்பன்வசுதேவர் முதலானயாவற்கு ருக்கும் உன்னையெனக்குகொடுக்க சம்மதமானால் நீநினைத்தபடி முடியும் ஆகையால நாமிருவரும் சம்மதிப்பது நீதிமார்க்கமல்லபோய்வாரும் பெண்ணே சுபத்திரா.



சுபத்திரைக்கும்-அர்ச்சுனனுக்கும் தர்க்கம்.

சுபத்திரை சொல்-தரு.

நீதியல்லவென்றாய் — நீயுநானுமிப்போ
ஜாதிமுறைமையான — சம்மந்தமல்லவோ

அர்ச்சுனன் சொல்-தரு.

சம்மந்தமென்றுசெல்வி — நானும்பேசிவிட்டால்
விம்ழூர்த்தமெனநானே — மெச்சஉச்சிதமோ

சுபத்திரை சொல் தரு.

உச்சிதமோவென்று — உறைத்தபேர்க்குகந்த
மைத்துனரேசொல்வீர் — வழக்குமுறைமையுண்டோ

அர்ச்சுனன் சொல் தரு.

வழக்குமுறைமைராஜர் — மணமாலைகலியாணம்
முழக்கமோபெண்ணே — முடிமன்னர்க்கழகோ



சுபத்திரை சொல் தரு.

முடிமன்னர்மகிபாலர் — முகூர்த்தமும்பொருத்தமும்
கடிமணமாலையும் — கண்டபோதல்லவோ

அர்ச்சுனன் சொல் தரு.

கண்டபோதேகல்ல — கலியாணமாமென்று
பெண்டுகன்மைகளுண்டு — பெற்றவர்காணேன்

சுபத்திரை சொல் தரு.

பெற்றவரறியாமல் — பெண்ணும் ஆணும்கூடில்
ஒத்துப்பொருந்தினவர் — உலகத்திலில்லையே

அர்ச்சுனன் சொல் தரு

உலகத்திலுள்ளதென்று — உன்னைகொண்டுபோனால்
பெலவான் சூரியனவன் — பிடித்தடிப்பானே

சுபத்திரை சொல் தரு.

அடிப்பானென்றபூனைக் — காளைபயப்படுமோ
யெரிக்கக்காண்டாவனம் — யிட்டவர்நீரல்லோ

அர்ச்சுனன் சொல் தரு.

அதிகாலரகசுஷ்டம் — அற்பத்திபதினென்றும்
சேனைஅக்ரோணியை — ஜெயிக்கக்கூடாதே

சுபத்திரை சொல் தரு.

ஜெயிக்கக்கூடாதோயின்று — ஜெயதூரியோதனனை
தவித்தியனைவல்ல — சவுரியமில்லையோ

அர்ச்சுனன் சொல் தரு

அஞ்சாமல்துரியோதி — அவர்களைவெல்லவே
வெஞ்சிலையாலேமோதும் — விஜயனானல்லவே

சுபத்திரை சொல் தரு.

யீசனருளைப்பெற்ற — யெனதுமனனே
பாசம்வைக்காவிட்டால் — பாவங்களுன்னைசேரும்

அர்ச்சுனன் சொல் தரு.

பாவம்வந்தாலென்ன பழிக்குருக்காளாகேன்
வீணை துரியனை வெட்டி ஜெயிக்கொண்ணுதா

சுபத்திரை சொல் தரு.

ஜெயிக்கக்கூடுமென்ற வெதிர்குலத்தவருன
உனக்குப்பழிசுமக்குநம் உயிர்விடுவேனே.

அர்ச்சுனன் சொல் கவி.

உயிர்தனைவிடுவேனென்று உரைத்தபின்சுபத்ராயுந்தன்
பயநிலையரியவேண்டி பகர்ந்தனன்பயப்படாதே
அவர்விலாதமையன்தாயும் தந்தையுமரிந்தால்போதும்
துரியவன்வரினும்வாளால் துண்டிப்பேன் கண்டிப்பேனே.

அர்ச்சுனன் சொல் வசனம்.

கேளும்பெண்ணே சுபத்திரா உன்னுடைய உண்மையைக்கண்டரியும்படி இவ்வார்த்தைகளையுரைத்தேன் நீ யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம் உன் தகப்பன் தமையன்மார்கள் முதலானபேரும் யெனக்கு உன்னைகொடுக்க மனதுசந்தோஷம் துரியோதனன் உன்னைகலியாணம் செய்யும்படியாக வந்தாலவனையும் அவன்சேனைகளையும் யென்கையிலிரானின்ற வாளுக்கு யிரைகொடுப்பேன் பெண்ணே சுபத்திரா.

சுபத்திரை சொல் கவி.

சொல்லுவேனென்றபின்பு குறையெலாம்நிரைவிலக்கி
துள்ளியமனதுபொங்கி தானுடல்புளகமாகி
வள்ளல்மேல்மிகப்பூரித்து வாயிதழ்துடிக்கயோகி
கள்ளனையனுப்பிவிட்டு கடிக்ரவள்நடந்தாளன்றே.

சுபத்திரை சொல் வசனம்.

அர்ச்சுன சன்யாசியானவர் சொன்னவார்த்தையைக்கேட்டு சுபத்திரையம்மனுக்கு திரேகம்பூரித்து துரியோதனன் தன்னைகலியாணம் செய்யாமுன்னம் அர்ச்சுனமகாராஜன்வந்து மாலேயிடவேணடுமென்றும் அந்த அர்ச்சுனர்க்கே பாரியாளாகவேண்டுமென்றும் சுபத்திரையம்மன் கடவுளைதியானிக்கிரவிதம்நர்த்த



சுபத்திரை கடவுளைதியானிக்கும் தரு.

அகப்படுவேனோ துரியனுக்குநானும்
அர்ச்சுனன்மே லிச்சையானேனே
யென்தகப்பனும் சம்மதிக்கஇருபைபாரும்
சங்கரா கெங்காதரா அகப்படுவேனோ
ஆகாவு துரியோதனன் மீதில்லை
அர்ச்சுனன்மே லிச்சைகொண்டேன்
பாதகர்அனைவர்மனம் பிரியாமல்கிருபைபாரும்
சங்கரா கெங்காதரா அகப்படுவேனோ
விங்லைகயில்மதனரு ன் மணிமார்பனை
விஜயன்மேலிச்சை கொண்டேனை
பெற்றதாய்தந்தைமனது சேரவேண்டும்கிருபை
பாரும்கெங்காதரனேசங்கரனே அகப்படுவேனோ

சுபத்திரைசொல் கவி.

யென்அண்ணனே சருணம் யென்னம்மாள்சருணம்
அருள் சருணம்
ஆயேசருணம் யென்னையன்போடுபெற்ற
தாயேசருணம்

சுபத்திரை சொல்-வசனம்.

அரகராமகாதேவா காலசண்ட திரிநேத்திரா உலகமாதாவே ஜெகதீஸ்பரி துரியோதனன் யென்னைவந்து மணஞ்செய்யாமல் ஆளழகனை அர்ச்சுனமகாராஜன் வந்து யென்னைமாலேயிட வேணுங்கர்த்தனே.

சுபத்திரைதாய்தந்தைகளுக்கு சொல்-வசனம்.

சருணம் சருணம் தாய்தந்தை தமையன்மார்களே துரியோதனனுக்குமணம் செய்துக் கொடுப்பதாய் தாங்கள் யோசித்திருக்கிரபடியால் அந்த துரியோதனனுக்கு யென்னைமணஞ்செய்வதுசரியல்லதாய்தந்தைதமயன்மார்களே.

அசோதை சொல்-கவி.

சருணம்செய்மயிலேகேளாய் தலத்துள்ளசுபத்ரையாளே
அருவகைப்புதுமையான அதிசயம்கண்டதுண்டோ

கருநிறேர்ந்திங்கபெண்கள் கணவனையரிவினைப்போல்
பெருகியவருத்தமேது பேசுவாய்பேசுவாயே.

அசோதை சொல்-வசனம்

அகோவாருமம்மா சுபத்திரா யித்தனைநாளய்ப்பார்க்கினும் யின்றைதினம் உன்முகம் செந்தாமரைப் புஷ்பம்போல் யிருக்கப்பட்டமுகமானது வேறுபட்டு யிருக்கவேண்டிய தென்றுசொல்லுமம்மாள்தாயே சுபத்திரா.

சுபத்திரை சொல்-கவி.

பேசுமென்றென்னைப்பெண்ணாய் பெற்றதாயாரேகேளீர்
தேசுள்ளசன்னியாசி செஞ்சிலைவிஜயனாகும்
வாசமாம்சிலநாளிந்த மண்ணிலேயென்னைக்காண
ஆசையுள்ளவர்களானார் அவர்க்கென்னையருளுவீரே

சுபத்திரை சொல்-வசனம்.

கேளும் யெனது தாய்தந்தையே யிதோசன்னாசியாகவந்திருப்பவர்விஜயபூபதியாகும் அவருக்குயென்னை விவாகம் செய்துவைக்கும்படி கிருபை செய்யவேண்டுந்தந்தையே.

அசோதை சொல்-கவி

அருமைசன்னாசியான அவன்றனையின்றரிந்த
குருகுலனிந்தவேஷம் கொண்டதுயிதற்குண்டான
வருமையாய்வசுதேவர்க்கும் யெனக்குமப்படியேசண்டாய்
மருமலர்விதுவேயெண்ணம் மற்றவர்க்கேற்றிடாதே.

அசோதை சொல்-வசனம்.

கேளுமம்மா சுபத்திரா அந்தசன்னாசியான அந்த அர்ச்சுனமகாராஜனுக்கு உன்னைவிவாகம் செய்துக் கொடுக்க யெங்களுக்குசம்மதந்தான் யின்னம் யிருப்பவர்களுக்கும் உன்தமையன் பலராமர்கிருஷ்ணமூர்த்திக்கும்யிவ்வார்த்தையேற்காதம்மாதாயேசுபத்திரா

சுபத்திரை சொல்-தரு.

| | |
|---|---|
| மைத்துனோர்களறிய | மனமதுமேனுமென்ன |
| மாதகவேசொலுவன் | கேள் |
| மாதாபிதாவின் | மனதுகளோத்திருந்தால் |
| சேதங்கள் | வாராதடி-மைத்து |



அசோதை சொல்-தரு.

| | |
|---|---|
| வாராகடியென்று | சுபத்திரா |
| மனமதுமகிழ்ந்து | சொன்னாய் |
| பேர்புகழான | பூபாலர்வணம்சொற |
| பலராமர்க்கென்று | சொல்வேன்-வாராதடி |

சுபத்திரை சொல்-தரு.

| | |
|---|---|
| சொல்வதென்னடிதாயே | யென்மனதுக்கு |
| சரியல | அரியோதிரன் |
| சரியல்லவுவனென்னை | தழுவிசுகமளிக்க |
| தகாதுதகாதுசொன்னேன் | அன்னையே-சொல்வ |

அசோதை சொல்-தரு.

| | |
|---|---|
| அம்மணியென்றுசொல்வி | யென்மகளே |
| அரிவழிக் | தேதுசொன்னாய் |
| உண்மையான் சொல்லுகிறோம் | உன்னண்ணன்மாரிப்போ |
| உரைக்கின்றால் | யேதுசெய்வேன்-அம்மணி |

சுபத்திரைசொல் கவி.

மைத்துனோரறியவேண்டாம் வனமணிகிருஷ்ணதேவர்
சற்றுமேயறிந்தால்போதும் சகலகாரியமும்கூடும்
உத்தது அருளிநீங்கள் ஒருமிக்கயின்றெடுத்தீர்
அத்தன்போல்வந்தமன்னன் அவனைநான்மணஞ்செய்வேனே.

சுபத்திரை சொல் வசனம்.

கேளும் யெனதுதாயே அந்த சன்னாசியென்னை மாலையிடுவதற்கு வேறொருவருக்கும் தெரிவிக்கவேண்டியதில்லை யென் தமையனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி யறிந்தால்போதும் அவர்மனம் வைத்தால் சகலகாரியங்களும் கைவல்யமாகுமேயன்றி வேறில்லை உத்தமமான வார்த்தையைச் சொன்னேன் அதுவுமன்றியில் யென்னையின்றெடுத்த அன்னையே அத்தனாகியபரமசிவத்தைபபோல் வந்திருக்கும் அந்த அர்ச்சுனசன்னாசியைமாலையிடுவேனே யல்லாமல் வேறொருவரை மாலையிடேன் யெனதுமாதாவே.

பொது-வசனம்.

இக்கப்பிரகாரம் தேவகியம்மனும் சுபத்திரையம்மனும் ஒருவருக்கொருவர்வாக்குவாதம் செய்துக் கொண்டிருக்கும் போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் தாயாரண்டைவந்து சொல்லுகிரவிதங் காண்க.

கிருஷ்ணமூர்த்தி சொல்லுகிர-கவி.

மருவியமுலைப்பால்தந்து வளர்த்தமாதாவேபோற்றி
தாளாட்டித்தொட்டிலிட்டு காலாட்டுந்தாயேபோற்றி
துரைதிரியோதனர்க்கென் சொல்லாலெழுதினார்கள்
தரைமயில்சுபத்திரைக்குச் சோபனநாளையம்மா.

கிருஷ்ணமூர்த்திசொல்-வசனம்.

யென்னை அன்போடு அபூர்கம் கொடுத்து தொட்டிலில்வைத்து தாலாட்டிவளர்த்தயெனது அன்னையே ஆஸ்திநேபுரியையாளும் துரியோதன மகாராஜனுக்கு யென்தங்கையாகிய சுபத்திரையைபாணிக்கிரகணஞ்செய்து போகும்படி நிருபம்யெழுதினேம் சுத்திரையம்மனுக்குநாளையதினம் முகூர்த்தம் நடப்பதுநிச்சயமம்மா தாயேமாதாவே.

பொது கவிப்பா.

செழுந்தாமரைக்கண்ணன்மாயோன் சுபத்திரைதேசமன்னர்
தொழுதாருடையதிரியோதனர்க்கென்றுசொன்னபின்பு
விழுந்தாள்விலேசிரித்தாள் துடித்துடல்விம்மிவிம்மி
யெழுந்தாளுடனேயிருந்தாள்மனமதுயேங்கினளே.

பொது வசனம்

ஸ்ரீகிருஷ்ணதேவர் சுபத்திரையை துரியோதனன் நாளையதினம்வந்து கலியாணம்செய்துக் கொள்ளப்போகிராரென்று சொன்ன வார்த்தையைக்கேட்டு துடிதுடித்து உடலபதைத்து அதிக வருத்தமாக பூமியில் மூர்ச்சித்துவிழுந்து யிருக்கும்போது கிருஷ்ணமூர்த்திசொல்லுகிர விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

யேங்கியசுபத்திரைதன்னை யெதிர்குலர்யிருகையாலே
தாங்கியேமடிமேல்வைத்துதடங்கண்ணீர்துடைத்துத்தேற்றி



யியங்கியேமூர்ச்சையாகி யிருவிழியருவிச்சேர
தீங்குகள்யேதோவம்மா செப்புவாய்தாயேயென்றார்

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

இவ்விதமாக சுபத்திரையம்மனை ஸ்ரீகிருஷ்ணதேவர்வாரியெடுத்து தன்மடிமேல்வைத்து ஆருபோல்கண்களில் சலமானது தாரைதாரையாக வருவதைத்துடைத்து முத்தமிட்டு மூர்ச்சைதெளிந்தபிறகு தாயாரைப்பார்த்து சுபத்திரையம்மன் யேன் மூர்ச்சித்ததென்றுகேழ்க்க தேவகியம்மன் சொல்லுகிர விதங்காண்க.

தேவகிசொல்-கவி.

தேவர்கள்புகழும்கிருஷ்ணா திருத்தென்டுசன்னாசியானோர்
காவலன்விஜயனென்று கண்டுமேமையல்கொண்டாள்
பூவைமாமயில்காந்தாரி புதல்வர்க்குவுதவிசெய்தால்
சாவதென்றுரைத்தாள்கிருஷ்ணா தையலென்செய்வேனப்பா.

தேவகிசொல்-வசனம்

கேளும் கிருஷ்ணா நமது அரண்மனையில்வந்திருக்கும் விஜயசன்னாசியைக்கண்டு மையல்கொண்டால் திரியோதனனுக்கு தன்னை மணஞ்செய்துவித்தால் தன்னுயிரைவிடுவேனென்று ஒரேயுறிதியாகச்சொல்லுகிறாள் அதற்குநானென்செய்வேனப்பா கிருஷ்ணா.

கிருஷ்ணமூர்த்திசொல்-கவி

செய்வதேதென்றுரைத்த தேவகிதாயேகேளாய்
அய்வரில்ஒருவனான அற்சுனன்தனக்குதன்னை
மைவிழியானமாதை வதுவைசெய்திடுவோமிப்போ
தையல்யென்தங்கையாளை தன்மனம்தெளிவிப்பாயே.

கிருஷ்ணமூர்த்திசொல்-வசனம்

கேளுமம்மாதாயே ஐவருஜாக்களில் ஒருவனாகிய அர்ச்சுனமகாராஜனுக்கு தங்கையாகிய சுபத்திரையை கலியாணஞ்செய்து வைப்போம் தங்கையின்மனதைதேத்தி தையிரியம்சொல்லுமம்மா தாயே மாதாவே.

பொது-கவி.

இப்படிசொல்லியந்த யெம்பெருமானுமப்போ
தப்பிலாதமையன்கூட தன்னுவாரகையிலுள்ளோர்

இப்பெரும்புண்யகாலம் மெல்லோரும்கூடிச்சென்று
ஒப்புடன்வருவோமென்று உயிர்வனமேகினரே.

பொது வசனம்.

இவ்விதமாக கிருஷ்ணமூர்த்தியானவர்மனதில் கபடம்வைத்து தன்னுடைய தமையனாகியபலராமரையுங் கூட்டிக்கொண்டு துவாரகாபுரியிலுள்ள யாவற்றுமான ஜெனங்களும் சூழத்தக்கதாக யிந்த புண்ணியகாலத்தில் கானகம்சென்று தீர்த்தமாடி வருவோமென்று வனத்தில்வந்துசேர்ந்து கிருஷ்ணமூர்த்திசூது செய்கிறவிதங்காண்க.

பொது கவி.

நீதியாயரசரெல்லாம் ஷேமமாய்க்கருமம்செய்து
போதுபோய்மறைந்தபோது போனவர்யூக்கம்கொண்டார்
சூதினால்மாயகிருஷ்ணன் தூங்காமல்நீங்கிமெள்ள
பாதிராவளவில்மீண்டுப் பட்டணங்கிட்டினாரே.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் ஸ்ரீகிருஷ்ணதேவர் துவாரகாபுரிபட்டணத்திலிருக்கப்பட்ட ஆண்பிள்ளைகளெல்லாம் வனசஞ்சாரம் செய்யப்போய்விட அவரவர்நித்தியகருமங்களைமுடித்து அனைவரும் அசந்து நித்திரைசெய்யும்போது இராத்திரி பதினைந்துநாழிகையில் கிருஷ்ணமூர்த்தியானவர் யிரண்டு கிருஷ்ணனாகவிருந்து துவாரகாபுரிக்குவந்து அர்ச்சுனனுக்கு சுபத்திரையை விவாகம் செய்துவைக்கவேண்டுமென்று தேவேந்திரன்முதலான சப்தரிஷிகளையும் நினைத்தமாத்திரத்தில் அவர்களனைவரும் வருகிற விதங்காண்க.

தேவேந்திரன் வருகிற-தரு.

இந்திரன்வந்தாரே தேவயிந்திரன்வந்தாரே
விந்தவிஜயன்காண யிந்திரர்வந்தாரே
சித்தர்கள்சாரணர் வித்தியாதார்கள்சூழவே
வந்துகொந்தளர் சிந்தை அந்தணர்
வானவரனைவர் சூழவே-இந்தி

விந்தையதாய்மார் வெகுண்டுசூழவே
விசித்திரவெண்சாமரம் வீசவே
ரம்பையூர்வசியும் மேனகைபாடவே
நாட்டியப்பெண்களும் நடனமாடவே-இந்தி



மணிமுடிமகா குண்டலமாடவே
மன்னும்பூஷணம் மின்னிஜொலிக்கவே
வெண்ணையுண்ணருள் கண்ணனைப்பார்க்கவே
விமலனருள்பாதம் கண்டுப்பணியவே-இந்திரன்

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

புகல்புகுந்தவரைக்காக்கும் புரந்தரகேளாயுந்தன்
மகனாம்அற்சுனர்க்கு மங்கையைவிவாகம்செய்ய
தகுதியாய்நீயுமசத்த ரிஷிகளினாலேயுந்தன்
உன்மகனைகாண்டைபற்கு மணமதுசெய்விப்பாயே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

அகோவாரும்தேவேந்திரமகாராஜனே உன் குமாரனாகிய அர்ச்சுனமகாராஜனுக்கும் யென்தங்கையாகிய சுபத்திராதேவிக்கும் சத்தரிஷிகளினாலே அதிசீக்கிரத்தில் விவாகம் நடத்திவையும்தேவேந்திரமகாராஜனே,



அற்சுனன் சுபத்திரைகல்யாண அலங்காரத் தரு.

பட்டுப்பீதாம்பரத்தால் பந்தல்தன்னைஜோடிக்கார்கள்
ரத்தினத்தூண்களாலே சா களதுகானிருத்தி

அம்பிவலமாகவே அரசாணிமுன்பாகவே
உண்மையுள்ளவேதியர்கள் உள்ளபடிவேதம்சொல்ல
நன்மையுள்ளசுபதினத்தில் காரணமைத்துனர்க்கு
மங்கில்யம்தான்தரித்தார் மாலையிட்டுசேஷைவிட்டார்

பொது கவி.

மணம்செய்துதேவராஜன் மன்னனுமுன்னடந்து
அணிகுழலாளைக்கூட்டி அனுப்பியேவிட்டுகிருஷ்ணர்
வனந்தனில்நித்ரைசெய்யும் மகிழ்பலராமரோடே
யினிதுடன்தானுமேகி யிருந்தவர்வருகின்றாரே

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் ஸ்ரீகிருஷ்ணதேவர் அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் விவாகம் நடப்பித்து யிருவரையும் யிந்திரபுரி பட்டணம்போகும்படியாக அனுப்பிவிட்டு தானும் வனத்திற்குச் சென்று அவ்விடம் நித்திரை செய்யும்போது அர்ச்சுனன் சுபத்திரையைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் தர்க்கம்-தரு

சுந்திரவதனியே சுபத்திரையெனுங்கண்ணே
சிந்தைகளிககமோகம் தெளிந்துதேரபெண்ணே

சுபத்திரை சொல் தரு.

பெண்டைக்கொள்ளுவதென்றுபிடித்தவேஷம்பொல்லாது
துன்பமுடனேபாபம் துலைந்துதேசொல்வாய்

அர்ச்சுனன் சொல்-தரு.

பாபந்துலைந்ததென்று பழித்தாயேயெக்குநீ
ஆவலாயழைத்ததை அறியாயோபெண்ணே

சுபத்திரை சொல்-தரு.

அறிவேனறிவேனுன்னை அருமணம்செய்யவே
சொருசுமாத்திலந்த திருடர்நீரல்லவோ

அர்ச்சுனன் சொல்-தரு.

கொஞ்சும்கிளியேயென்னை கூடியணைவாயென்று
கெஞ்சும்மனதுவாடி நீயழகில்லையோ



பொது-கவி.

இந்திரபுரியைநோக்கி யிருவரும்வருகும்போது
அந்ததோர்வேளைதனனில் அமர்ந்தகாவலர்கள்கண்டு
வந்தவர்கேழ்க்கமன்னன மரிபடாதேகும்போது
அந்தநல்வனத்துக்கேகி அடவுடநமைசெய்வாரே.

பொது-வ்சனம்.

இவ்விதமாக அர்ச்சுனமகாராஜன் சுபத்திரையை மாலையிட்டுக் கொண்டுயிருவரும் மகாசந்தோஷத்துடன் யிந்திரபிரஸ்தம்பசேர்ந்தார் அப்போது யிந்தசங்கதியைபலராமர் கிருஷ்ணமூர்த்திக்குத தெரிவிக்கும்படி வேருக்காரர்வனத்திற்குவருகிற விதங்காண்க.

வேருக்காரர்வருகிற-தரு.

வாகைபுனையெதிர்குல மன்னவர்கள்தன்னைக்காண
வேகமாகவேயோடி வேருகாரரும்தோன்றினார்
பட்டயம்பரிசைபாலா பாக்குடன்கையில்பிடித்து
விட்டசுங்குதட்டிகட்டி, வேருகாரரும்தோன்றினார்
கண்டவர்பயந்துவோட கடுகியேநடைநடந்து
மண்டலம்நடுநடுங்கி மகிழ்வுடனோடிவாரார்
பலராமர்கிருஷ்ணர்தாங்கும் பாங்குள்ளவனத்தைநாடி
நலமுடன்சேதிசொல்ல நாடியிதோவந்தார்பாரீர்-வாகை

வேருக்காரற்-வசனம்.

அகோசருணம் சருணமையாசுவாமி பலராமரே ஸ்ரீகிருஷ்ண தேவரே நம்முடைய அகத்திலிருந்த சன்யாசியானவர் அர்ச்சுனமகாராஜனாகி உங்கள்தங்கையாகிய சுபத்திராதேவியை விவாகம் செய்துக் கொண்டு போகையில்நாங்கள் யெங்களால் ஆனபரியந்தம் மறித்தும் நிலலாமல் அவாளுடைய பட்டணமாகிய யிந்திரபுரிக்கிப் போய்விட்டார்களையாசுவாமி பகவானே.

பலராமர் சொல்- கவி.

யீரநெஞ்சுடையோன்பேரில் யிஷ்ட்டமாகிருஷ்ணாகேளாய்
மூரியேசேனையோடு மூடிகியேகடுகிச்சென்று
சோரம்செய்விஜயனான துஷ்ட்டனைத்துணிக்கவேண்டும்
வீரவாளெடுத்துநீதான் வெகுண்டுமேவாராய்தம்பி

பலராமர் சொல்-வசனம்.

அகோவாரும் தம்பி கிருஷ்ணதேவரேநெஞ்சில் யீரமில்லாத அந்தசன்னியாசியாகிய அர்ச்சுனன்னமது சுபத்திராதேவியை சோரபாவத்தாகமாலையிட்டு தன்னுடையபட்டணம்பிடடுக்கொண்டுபோய் விட்டானல்லவா அவனையினிநாம் சும்மாவிடலாகாது ஆகையால் வீரவாளை யெடுத்துக் கொண்டு அர்ச்சுனன்பேரில் யுத்தத்திற்கு அதிகவிரைவாகப்புறப்படுங் தம்பி கிருஷ்ணா.

கிருஷ்ணமூர்த்தி சொல-கவி.

வாணிசேரலகைபேங்லும் மன்னவாயுந்தனுக்கு
நாளிலேசொல்லிவந்தேன் நானுமேபேயனானேன்
வேளைகளிங்குச்சொன்னால் வெகுண்டுமேயிகம்வாருண்டோ
காளையாம்சன்னியாசி களவெலாம்வெளியாச்சென்றே

கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

கேளும் தமையனாரேகாட்டில் யிருந்த அந்தசன்னியாசியை மூதலில் கொண்டுவந்து நமது அரண்மனையிலிருக்கும்படி சொன்னீர்நான் கூடாதென்று பலதரமும் தடுத்துச்சொல்லியும் யென்வார்த்தையைக் கேளாமல் போய் விட்டீர் அந்தசன்னியாசி செய்தகளவுகள்யிப்போது வெளியாச்சுதுபாரும் அண்ணாவே.

பலராமர் சொல்-கவி.

கள்ளனென்றறிந்தேனானால் கண்டதோர்வில்லாலன்று
துள்ளவேகொல்வேனப்போ அவன்செய்கைமெய்யென்றெண்ணி
விள்ளவேஅழைத்தேனல்லால் வேண்டியேசுபத்ரைதன்னை
மெள்ளவேகொண்டுபோன விஜயனைக்கொல்லுவேனே.

பலராமர் சொல்-வசனம்.

கேளும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே அந்தசன்னியாசியாகிய அர்ச்சுனனவன்யிப்படி செய்வானென்று தெரிந்தால் அப்போதேயென் அஸ்தத்திலிரானின்ற வில்லுக்குயிரைகொடுத்திருப்பேன் சன்னியென்று யோசித்துநமதுவளவில் கொண்டுவந்து சேர்த்தேன்யிப்படி மோசம் செய்து நமது தங்கையாகிய சுபத்திரையைமாலைசூட்டி அழைத்துக் கொண்டுபோய் விட்டான் ஆகையால் நமது தங்கையைக்



கொண்டு போனசன்னியாசியாகிய விஜயனைக்கொல்லுக்கிறேன்பாரும் தம்பிகிருஷ்ணதேவா.

கிருஷ்ணமூர்த்தி சொல்-வசனம்.

அகோவாரும் அண்ணாவே அந்தசன்னியாசியாகிய விஜயனைநம்பிடவீட்டில் ஆகாதென்று நானெத்தனையோ விதம் சொன்னதுகேளாமல் அவனைக்கொண்டுவந்து யிவ்விடம் சேர்த்தீர் ஆனபடியினால் அவன் சுபத்திரையை விவாகம்செய்துக்கொண்டு தெரியாமல் போய்விட்டானே அவனும் நமது தங்கையின் புருஷனாச்சுதே அவனைக்கொன்றுவிட்டாலநம் முடையதங்கையாகியசுபத்திரையும் மன்விதவையாகிப்போவாளே அதற்குநான் யென்னசெய்யப் போகிறேன் அண்ணாவே.

பலராமர் சொல் கவி.

தீர்க்கமாயிரண்டுபேரும் செட்டியுங்கட்டான்போல
யேர்க்கவேபேசிநீங்கள் யிட்டதோர்கலகந்தானே
மார்க்கமாய்சொன்னால்நானும் மருப்பதுவழக்குந்தானே
கார்க்கவேசுபத்ரைதன்னை கடுகவேயழைத்திடாயே

பலராமர் சொல் வசனம்

அகோவாரும் தம்பி கிருஷ்ணா யிந்தவிஷயங்களெல்லாம் உன்னால்யேர்ப்பட்ட கலகமேயன்றிவேறில்லை ஆனால்அர்ச்சுனராஜனையும் தங்கையாகிய சுபத்திரையம்மனையும் யிவ்விடம் வரவழைத்து யிருவரையும் ஊர்பிரதக்ஷணம் செய்துவையும் நான்யென்கண்ணினால்பார்க்கவேண்டும் ஆகையால் அவர்களை அழைத்துவரும்படி தூதுவரையனுப்பும்கிருஷ்ணதேவனே

பொது கவி

அப்படியாகுதென்று அக்ஷணம்தூதாள்விட்டு
செப்பமாயிருவர்தம்மை சிரப்புடன்கோலம்செய்து
ஒப்புள்ளயிருவர்தாமும் உயிரிந்ரபுரியைச்சேர்ந்து
தப்பிலாத்தமையன்கூட தானுமேவாழ்ந்திருந்தார்

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் பலராமர் சொல்லியபிரகாரம் யிந்திரபிரஸ்தம் சென்றிருந்த அர்ச்சுனமகாராஜனையும் தங்கையாகியசுப

த்திரையம்மனையும் சாரணர்களைவிட்டு யிருவரையும் துவாரகாபுரிபட்டணத்துக்கழைத்துவந்து பதினெட்டுவகைமேளவாத்தியத்துடன் தாம்தாமென்று முழக்கத்தக்கதாக அர்ச்சுனமகாராஜனையும் சுபத்திரையம்மனையும் பட்டணம் பிரதக்ஷணம் செய்வித்து யிருவரையும் தங்கள்பட்டணமாகிய யிந்திராபுரிபட்டணத்தில் கொண்டுவந்துவிட்டார்கள் பிறகு அர்ச்சுனமகாராஜன் சுபத்திரை சமேதராக அதிகசந்தோஷத்துடன் தனது தமையன் தம்பிமார்களுடனேகூடி ஆனந்த சந்தோஷமாக யிந்திரபிரஸ்தத்தை அரசாக்ஷிதம் செய்துக்கொண்டு வருகிறார்கள் யென்பதாம்.

## வாழி கவி

சுபத்திரைகாதல்தன்னை சிருடன்கேட்போர்வாழி
தபத்தினில்பெரியோரான சதுர்மறையோர்கள்வாழி
மிகுத்தபமுனிவோர்வாழி விண்ணுள்ளோரெவரும்வாழி
ஜெகத்தினிலுள்ளோர்வாழி தேசமும்வாழிதானே

## மங்களம் தரு.

மங்களம் மங்களம் பவத்துதே மங்களம் மங்களம

ஸ்ரீராமச்சந்திரர்க்கு ஜெயமங்களம்-நல்ல
திவ்யமுகசந்திரர்க்கு சுபமங்களம்
மாராபிராமனுக்கும் மன்னுபரந்தாமனுக்கும்
யீராருராமனுக்கும் யிரவிகுலசோமனுக்கும்—மங்க

சுபத்திரைமாலையிடு நாடகம்

முற்றிற்று.

—(*)—

சென்னை-600 008.
148628